விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka


கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 24
ஒலி 251 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 10 ஞாயிற்றுக்கிழமை (27.08.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## 'சிவசக்தி' சந்திரயான் 3 தரையிறங்கிய இடம் பெயர் சூட்டினார் பாரத பிரதமர்



(பெங்களூரு)
நிலவின் தென் துருவத்தில் சந்திரயான் - 3 லேண்டர் தரையிறங்கிய இடத்திற்கு 'சிவசக்தி' என பிரதமர் மோடி பெயர் சூட்டினார். நிலவின் தென் துருவத்தை ஆய்வு செய்ய அனுப்பப்பட்ட சந்திரயான் 3 விண்கலத்திலிருந்து கடந்த 23ஆம் திகதி, விக்ரம் லேண்டர் நிலவின் தென் துருவத்தில் வெற்றிகரமாக இறங்கி சாதனை புரிந்தது.

இதற்கு உலக நாடுகள் இந்தியாவுக்கு வாழ்த்து தெரிவித்த நிலையில், பிரதமர் மோடி விஞ்ஞானிகளை பாராட்டுவதற்காக நேற்றுக் காலை பெங்களூருவில் உள்ள இஸ்ரோ மையத்திற்கு சென்றிருந்தார்.

இஸ்ரோ மையம் சென்ற அவரை, இஸ்ரோ தலைவர் சோம்நாத் மற்றும் விஞ்ஞானிகள் வரவேற்றனர். சந்திரயான் 3 திட்ட இயக்குனர் வீரமுத்துவேல், சந்திரயான் 3 மாதிரியை நினைவுப் பரிசாக வழங்கினார்.

பின்னர், இஸ்ரோ தலைவர் படம்பிடிக்கப்பட்ட நிலவின் போட்டோக்களை வழங்கினார். பின்னர் சந்திரயான் 3 விண்கலம் நிலவில் கால் பதித்தது குறித்து, இஸ்ரோ தலைவர் சோம்நாத் 19

# வடக்கை வாட்டும் கடுமையான வறட்சி

### குடிநீருக்கே கடும் தட்டுப்பாடு
### பயிர்ச்செய்கைகள் முழுமையாகப் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)
**கடுமையான வறட்சி காரணமாக வட மாகாணம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.**

**குடிநீருக்கே கடுமையான தட்டுப்பாடு நிலவுவதோடு பயிர்ச் செய்கைகளும் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.**

தற்போதைய வறட்சியான காலநிலையினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

இதன்படி 84,664 குடும்பங்களைச் சேர்ந்த 291,720 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்த நிலையம் குறிப்பிட்டுள்ளது.

வறட்சியான காலநிலையினால் வட 19

### வறட்சியான வானிலையால்
## எலிக் காய்ச்சல் பரவும் அபாயம்

(கொழும்பு)
எலிக்காய்ச்சல் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

வறட்சியான வானிலை மற்றும் நீர்ப் பற்றாக்குறையே இதற்கு முக்கிய காரணம் 19

### ஐ.நா கூட்டத் தொடரில் பங்கேற்க
## அமெ. செல்கிறார் ஜனாதிபதி ரணில்

(கொழும்பு)
ஐக்கிய நாடுகள் பொதுச் சபை கூட்டத்தொடரில் கலந்துகொள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் மூன்றாவது வாரத்தில் அமெரிக்காவுக்கு செல்லவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78ஆவது அமர்வு எதிர்வரும் செப்ரெம்பர் 19

## மன்னார் மடு ஆலயம் ஒற்றுமையின் சின்னம்

### அமெரிக்கத் தூதுவர்



(மன்னார்)
மன்னார் மடு ஆலயம் மதங்களுக்கிடையிலான ஒற்றுமையின் சக்திவாய்ந்த சின்னம் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் தெரிவித்துள்ளார். 19

## இனங்கள், மதங்களிடையே முரண்பாடுகளை ஏற்படுத்த முயற்சி

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)
இனங்கள், மதங்கள் இடையே முரண்பாடுகளை ஏற்படுத்த சிலர் முயற்சி செய்து வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

தொடம்கஸ்லந்த ஸ்ரீ சைலத் தலாராம விகாரையில் தூபியைத் திறந்து வைக்கும் நிகழ்வில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் 04

## முட்டையை உடனடியாக இறக்குமதி செய்ய நடவடிக்கை

(கொழும்பு)
முட்டை இறக்குமதியை உடனடி 19

## குளவி கொட்டியதில் ஒருவர் உயிரிழப்பு

### மிருசுவிலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)
மிருசுவிலில் குளவி கொட்டுக்கு இலக்காகி முதியவர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் தவசிகுளம் - மிருசுவில் பகுதியைச் சேர்ந்த இமானுவேல் 19

## கஜேந்திரகுமாரின் வீட்டுக்கு முன் 2ஆவது நாளாக பதற்றம்

### இராணுவம், பொலிஸார் குவிப்பு



(கொழும்பு)
பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் 19

நடுவு நிலை தவறாது நன்மதிப்பைக் காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திருமதி கார்த்திகேசு குணபாக்கியவதி

வாகையடி மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் உசனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கார்த்திகேசு குணபாக்கியவதி (குணம்) அவர்கள் 23.08.2023 புதன்கிழமை உசனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான நாராயணபிள்ளை - நாகமுத்து தம்பதியரின் சிரேஷ்ட மருமகளும் கார்த்திகேசு (சிவபாதம் - ஓய்வுபெற்ற தபால் ஊழியர்) அவர்களின் அன்பு மனைவியும் முரளிதரன் (லண்டன்), யசீதரன் (லண்டன்), தயாளதரன் (லண்டன்), அகல்யா (ஆசிரியை - யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்), அனுஸா (ஆசிரியை, யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் வாசுகி (லண்டன்), கந்தவேள் (இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் அமரர் பத்மநாதன் (ஆசிரியர்), இராசரத்தினம் (நவாலி), அமரர் தனபாக்கியவதி (தனம்ரீச்சர் மட்டுவில்), அமரர் பத்மாவதி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் அமரர் சிவசுப்பிரமணியம், சிவகுரு, அமரர் சிவராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும் சோபிதாவின் (மருத்துவர் - லண்டன்) பெரிய தாயாரும் கௌசிகன் (லண்டன்), அஜந்தன் (லண்டன்), அபினாஸ் (லண்டன்), கேசிகா, மிபிஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.08.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக உசன் ஈச்சங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிற்றம்பலம் வீதி,
உசன், மிருசுவில்.

(16843)

*தகவல் :* குடும்பத்தினர்
077 631 4178


## பணிப்பெண் தேவை

யாழ் நகரில் உள்ள 05 பேரைக் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு சமையல் வேலையாள் தேவை. 40 - 55 வயதிற்கு உட்பட்ட தங்கி நின்று வேலை செய்யக் கூடிய பெண் தேவை.

**சம்பளம் - 45,000**

(16841)

**077 937 0000**
**075 988 1000**

## கனடா சுற்றுலா விசா

சுற்றுலா விசா மூலம் கனடாவிற்கு மிக குறுகிய காலத்தில் குறைந்த செலவில் செல்வதற்கு எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.
போலந்து நாட்டில் வேலைவாய்ப்புகள் உள்ளன.
தேவைப்படுபவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.

(C-7134)

**Hybrid International Hub(pvt) ltd Jaffna**
(வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)

**021 222 1265, 076 250 0098**

**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு
**076 636 3378, 076 097 3127**

## யாழ் நகரில் காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரி நல்லூர் வீதியில் கச்சேரிக்கு அண்மையில் 3 1/2 பரப்பு காணி இரண்டு வெட்டு கிணறுகளுடன் உடன் விற்பனைக்கு உண்டு.55 (SL Rs.) மில்லியனுக்கு மேலான விலை எதிர்பார்க்கப்படுகிறது.

(16830)

மின்னஞ்சல் : **jamesraj_uk@yahoo.co.uk**
**+44 796 374 3585** (Whatsapp)
**021 222 7141** (Sri Lankan no)

## விற்பனைக்கு

- 275 அடி நீளம் 135 அடி அகலம் கொண்ட அமானுச சீட் கொண்ட தகரக் கொட்டகை விற்பனைக்குண்டு.
- 100 அடி நீளமும் 30 அடி அகலமும் கொண்ட அஸ்பெஸ்ட்டஸ் சீட்கொண்ட 2 Set கொட்டகை விற்பனைக்குண்டு.

(16847)

**077 882 8638**

## விற்பனைக்கு

**குரும்பசிட்டியில் 2 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**

(16847)

**077 882 8638**


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

கடந்த 28.07.2023 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

## அமரர் காசிலிங்கம் செல்லத்துரை

(முன்னாள் மாங்குளம் தபால் அதிபர்,
ஓய்வுநிலை அஞ்சல் அத்தியட்சகர் - முல்லைத்தீவு மாவட்டம்)

| மண் மகிழ | விண் நெகிழ |
|---|---|
| 04.08.1943 | 28.07.2023 |



உணர்வோடு கலந்திட்ட எம்முயிர்த்தந்தையே – ஐயா
உம் பிரிவால் வாடுகிறோம் பிள்ளைகளும் உறவுகளும்
அன்பு பண்பு அறிவு திறன் இவையனைத்துக்கும் – நீரே
எமக்கு இவ்வுலகின் முதல் ஆசான்
வேராக இருந்து விழுதுகளை உய்வித்தீர் – இன்று
விழுதுகள் மட்டும் வேரிழந்து நிற்கிறதே
தந்தை மகற்காற்றும் உதவியால் அவையத்து முந்தி
இருக்கிறோம் – நீர் பெற்ற கண்மணிகள்
வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்துயர்ந்த ஐயாவே
எங்கள் வாழ்விற்கு ஒளியேற்றி வளம் சேர்த்தீர் இனிதாக
இரத்த உறவாக இதுவரை நாள் இருந்தீர்கள் – இன்று
எங்கள் உணர்வாகி உறங்கிவிட்டீர்கள்.
இனி எங்கள் வாழ்வுதனில் ஏழேழு தலைமுறைக்கும் – ஐயாவே
நீங்கள் தான் குலதெய்வம்.

இன்று (27.08.2023) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பாடசாலை வீதி, இடைக்காடு,
அச்சுவேலி.

(16787)

குடும்பத்தினர்
077 210 5354

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டத்தரணிகளை கண்டு நான் அஞ்சமாட்டேன்

## சரத் வீரசேகர

(கொழும்பு)

**"முல்லைத்தீவு நீதிபதியைக் காப்பாற்ற முயலும் வடக்கு - கிழக்கு சட்டத்தரணிகளின் எழுச்சியைக் கண்டு நான் அஞ்சமாட்டேன். சட்டத்தரணிகள் எனக்கு விடுத்துள்ள சவாலுக்கு நான் பாராளுமன்றத்தில் வைத்துத் தான் பதில் வழங்குவேன்" என பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.**



முல்லைத்தீவு நீதிபதி தொடர்பாக சரத் வீரசேகர எம்.பி. பாராளுமன்றத்தில் தெரிவித்த கருத்துக்குக் கண்டனம் தெரிவித்து வடக்கு, கிழக்கு சட்டத்தரணிகள் நேற்று முன்தினம் நீதிமன்ற நடவடிக்கைகளைப் புறக்கணித்து தத்தமது நீதிமன்றங்கள் முன்பாக அடையாளக் கண்டனப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது அவர்கள், "சரத் வீரசேகர எம்.பி. பாராளுமன்றச் சிறப்புரிமையைப் பயன்படுத்தி பாராளுமன்றத்துக்குள் இருந்து கொண்டு கதைக்காமல் தைரியம் இருந்தால் வெளியில் வந்து கதைக்க வேண்டும்" என்று சவால் விடுத்திருந்தனர்.

இந்தச் சவால் தொடர்பாகச் சரத் வீரசேகர எம்.பியிடம் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"பாராளுமன்றத்தில் நான் தெரிவித்திருந்த கருத்துக்குத் தான் வடக்கு - கிழக்கு சட்டத்தரணிகள் சவால் விடுத்துள்ளனர்.

எனவே, அவர்களின் சவாலுக்கு நான் பாராளுமன்றத்தில் வைத்துத்தான் பதில் வழங்குவேன்" என தெரிவித்தார். (4)

# ஐந்து நாட்களில் அறுவர் சுட்டுக்கொலை

(கொழும்பு)

தலங்கம, ரொபர்ட் குணவர்தன மாவத்தையில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்து, கொழும்பு தேசிய வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட 44 வயதுடைய நபர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவரே குறித்த துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டை நடத்திய வரும் அவருடைய நண்பர்களும் குறித்த பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளதுடன் சந்தேகநபர்களை கைது செய்வதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும் நாட்டில் கடந்த ஐந்து நாட்களில் 6 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவங்களில் 6 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (4)

# கல்வியியற் கல்லூரிகளை ஒன்றிணைத்து பல்கலை

(கொழும்பு)

கல்வியியற் கல்லூரிகளை ஒன்றிணைத்து பல்கலைக் கழகமாக்கும் புதிய யோசனை ஒன்றினை போதனா ஆசிரியர் சேவை முன்வைத்துள்ளது.

அதற்கிணங்க, நாட்டிலுள்ள 19 கல்வியியற் கல்லூரிகளையும் ஒன்றிணைத்து பல்கலைக்கழகமாக உருவாக்கும்போதனா ஆசிரியர் சேவையின் யோசனையை விரைவில் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பேன் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (4)

# பிரமிட் திட்டங்களை நம்பி மக்கள் ஏமாற வேண்டாம்

## இலங்கை மத்திய வங்கி

(கொழும்பு)

பிரமிட் திட்டங்களால் அவற்றின் சட்டபூர்வத்தன்மையை நிரூபிக்கும் நோக்கில் வெளியிடப்படும் கூற்றுக்களில் எவ்வித உண்மையும் இல்லை என்றும் அவற்றை நம்பி ஏமாற வேண்டாம் என்றும் இலங்கை மத்திய வங்கி பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

இணையவழித்தளங்கள் ஊடாக செயற்படும் சில பிரமிட் திட்டங்களில் பணத்தை முதலீடு செய்யுமாறு பொதுமக்களைத் தவறாக வழிநடத்துவதாகத் தமக்குப் பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இவ்வாறான கூற்றுக்களை தாம் முற்றாக நிராகரிப்பதாகவும் இக்கூற்றுக்களில் எவ்வித உண்மையும் இல்லை என்றும் மத்திய வங்கி அறிவித்துள்ளது.

எனவே இத்தகைய திட்டங்கள் தொடர்பில் மிகுந்த அவதானத்துடனும் விழிப்புடனும் செயற்படுமாறு மத்திய வங்கி பொதுமக்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

மேலும் இத்திட்டங்களில் முதலீடு செய்வதனூடாக பொதுமக்கள் பணத்தை இழக்கக் கூடும் என்பதனால் இவ்வாறான திட்டங்களில் முதலீடு செய்ய வேண்டாம் என்றும் மத்திய வங்கி வலியுறுத்தியுள்ளது.

இலங்கை மத்திய வங்கியினால் உரிமம் அளிக்கப்பட்டு, ஒழுங்குமுறைப்படுத்தப்படும் நிறுவனங்களின் விபரங்களை மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ வலைத்தளத்திலும் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் வலைத் தளத்திலும் பார்வையிட முடியும் எனவும் அறிவுறுத்தியுள்ளது. (4)

# வடக்கு-கிழக்கு தமிழர்களின் பூர்வீக தாயகம் அல்ல

## மேர்வின் சில்வா மீண்டும் இனவாத கருத்து

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு தமிழர்களின் பூர்வீக தாயகம் அல்ல. இது சிங்களவர்களின் பூர்வீக தாயகம். இந்நாட்டில் தமிழர்களுக்கு எந்த இடமும் சொந்தம் அல்ல என மீண்டுமொரு சர்ச்சைக்குரிய கருத்தை முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா வெளியிட்டுள்ளார்.


அவர் மேலும் கூறுகையில், வந்தேறு குடிகளான தமிழர்கள், இலங்கையில் எந்த இடத்தையும் சொந்தம் கொண்டாட முடியாது.

இந்தியாவிலிருந்து இலங்கை வந்த தமிழர்கள், இங்குள்ள இடங்களைச் சொந்தம் கொண்டாடினால் அவர்கள் மீண்டும் இந்தியாவுக்கு விரட்டியடிக்கப்படுவார்கள்.

வடக்கு - கிழக்கை "தமிழீழம்" என்று பிரபாகரன் சொந்தம் கொண்டாட முயன்றார்.

இறுதியில் அவருக்கு என்ன நடந்தது என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

இதைத் தமிழர்கள் மனதில் வைத்திருந்தால் சரி. இல்லையேல் அவர்களுக்குச் சிங்களவர்கள் செயலில் தான் பாடம் கற்பிக்க வேண்டிவரும் என தெரிவித்தார். (4)



# "அஸ்வெசும" கொடுப்பனவு நாளை முதல் ஆரம்பம்


(கொழும்பு)

அஸ்வெசும பயனாளர்களுக்கான கொடுப்பனவுகள் நாளை திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளதாக நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

இதனால் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்படும் எனவும் அஸ்வெசும பயனாளிகளுக்கான கொடுப்பனவு வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் ஜி.விஜேரத்ன இராஜினாமா செய்ததால் கொடுப்பனவு வழங்குவதில் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாக சலுகைகள் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் குறித்த சபை தெரிவித்துள்ளது. (4)

# செப்டெம்பரில் இலங்கை வருகிறார் இந்திய பாதுகாப்பு அமைச்சர்



(கொழும்பு)

இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 2 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

சீன ஆய்வுக் கப்பலான Shi Yan 6 இலங்கைக்கு வருகை தர திட்டமிட்டுள்ள நிலையில், அதற்கு முன்னதாக இந்திய பாதுகாப்பு அமைச்சரின் விஜயம் இடம்பெறவுள்ளது.

இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி பணிக் குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க உள்ளிட்டோருடன் கலந்துரையாடவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது, திருகோணமலைக்கு இந்திய பாதுகாப்பு அமைச்சர் விஜயம் செய்யவுள்ளதுடன், இரு நாடுகளுக்கும் இடையில் அமைக்கப்படவுள்ள எண்ணெய்க் குழாய் நிர்மாணத்தையும் அவர் பார்வையிடவுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவிற்கு அண்மையில் விஜயம் செய்திருந்தபோது, எண்ணெய்க் குழாய் அமைப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன், பாலம் அமைப்பது தொடர்பிலும் யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது.

திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி திட்டம் தொடர்பான உடன்படிக்கையும் ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின்போது கைச்சாத்திடப்பட்டிருந்தது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனங்கள்...

பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் மதங்கள் மற்றும் இனங்களுக்கு இடையே பூசல்கள் உருவாக்கப்படுகின்றன என்றும், வெவ்வேறு புவியியல் அதிகார வரம்புகளில் வாழும் மக்களின் சாதி மற்றும் மதத்தைப் பற்றி பேசி இந்த சர்ச்சைகளை அரசியல்வாதிகளே உருவாக்குகின்றனர் என்றும், அதன் மூலம் வாக்குகளைப் பெறவே எதிர்பார்க்கின்றனர் என்றும், வெவ்வேறு பகுதிகளில் உள்ள வெவ்வேறு நபர்களிடம் 13 குறித்து சிலரிடம் விருப்பம் என்றும் மற்றும் சிலரிடம் விருப்பமில்லை என்றும் ஜனாதிபதி கனவுகளை கொண்ட இவர்கள் இனங்களுக்கும் மதங்களுக்கும் இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்துகின்றனர் என்றும், 2019 ஆம் ஆண்டைப் போன்று மீண்டும் மக்களை ஏமாற்றத் தயாராகி வருகின்றனர் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இந்த அரசியல் தலைவர்கள் சரியான குணாதிசயங்களில் இல்லாமல் அதிகாரத்தை பெற்று ஜனாதிபதி மற்றும் பிரதமர் பதவியை பெற முயற்சிக்கின்றனர் என்றும், தமது சுகபோக வாழ்க்கை பாதிக்கப்படும் என்பதற்காக 220 இலட்சம் மக்களின் வாழ்க்கை எப்படி போனாலும் பரவாயில்லை என்ற போக்கில் பொய்யான வாக்குறுதிகளை வழங்கி ஆட்சியை தக்க வைக்க முயற்சிக்கின்றனர் என எதிர்க்கட்சித் தலைவர் இங்கு தெரிவித்தார்.

மதங்கள் இனங்களுக்கிடையில் நல்லிணக்கமும் ஒற்றுமையும் நிலவினால் தான் நாட்டின் ஒருமைப்பாடு, பிரதேச ஒருமைப்பாடு, பலம், இறைமை, எமது தேசியம் எமது வாழ்வியல் பாதுகாக்கப்படும் என்றும் எனவே இன, மத, சாதி முரண்பாடுகள் ஏற்படும் வகையில் ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் செயற்படாது என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது வைத்தியர் சாபி மலட்டு அறுவை சிகிச்சை செய்ததாக பல்வேறு குற்றச்சாட்டு களை முன்வைத்து இனப் பிளவைக் கிளப்பினர் என்றும், இறுதியில், வைத்தியர் சாபி சரியானவர் என்று நிரூபனமானது என்றும், எனவே புத்த சாசனத்தைப் பாதுகாக்க வேண்டுமானால் அனைத்து இன, மத, சாதி மக்களுக்கும் இடையிலான பிணைப்பு பலப்படுத்தப்பட வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் இங்கு தெரிவித்தார்.

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சுப் பதவிகளில் கொண்ட பேராசையால் சிலர் நாட்டை துண்டு துண்டாக பிரித்து வருகின்றனர் என்றும், இது தேசப்பற்று அல்ல என்றும், கடந்த காலங்களில் இனவாதத்தையும், மதவாதத்தையும் தூண்டி அதிகாரத்தைப் பெற்றவரை மக்களே விரட்டியடித்தனர் என்றும் படித்தவர்களையும் அறிவாளிகளையும் இணைத்துக் கொண்டு இந்நாட்டைக் கட்டியெழுப்பப் பங்களிப்பதை தான் பின்பற்றி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டு மக்களின் பிரச்சனைகளை பேச பாராளுமன்றத்திற்கு செல்லும் போது பாராளுமன்றத்தில் ஒரு முட்டாள் கூட்டம் கடுமையான வார்த்தைப் பிரயோகங்களை பேசி, பேச்சுக்களில் குறுக்கிட்டு மக்கள் பிரச்சினைகளை மூடிமறைக்க முயற்சிக்கின்றனர் என்றும், பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதாரத் துறைப் பேராசிரியரான வசந்த அத்துகோரலவின் ஆய்வின் பிரகாரம், இந்நாட்டின் 15 மாவட்டங்களில் உள்ள மக்கள் தண்ணீர் பற்றாக்குறையால் பாரிய பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர் என்றும், இதனால் அம்மக்கள் 10,000 கோடி ரூபாவுக்கு மேல் தங்க ஆபரணங்களை அடகு வைத்துள்ளனர் என்றும், பயிர் சேதத்தால் 60,000 ஏக்கர் நாசமாகியுள்ளதாகவும், இதனால் 68,729 கோடி பெறுமதியான தங்கம், நகைகள் ஆபரணங்கள் அடமானம் வைக்கப்பட்டுள்ளன என்றும், இப்பிரச்சினைகளுக்கு அரசாங்கத்திடம் தீர்வு இல்லை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இவ்வாறான பிரச்சினைகளுக்கு மத்தியில் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் தேர்தலை ஒத்திவைத்து அரசியல் சூதாட்டத்தில் ஈடுபட்டு தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கான திட்டங்களை வகுத்து வருவதாகவும் எதிர்க் கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார். (ம-7)


## தேடல்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட பெந்தர, ஹபுருகல **(Benthara, Haburugala)** பிரதேசத்தில் 1979,1980 களில் சேவையாற்றிய வைத்தியர் சின்னத்தம்பி தர்மலிங்கம் அவர்களை தொடர்புகொள்ள விரும்புகின்றோம். அவரைப் பற்றிய தகவல் அறிந்தவர்கள் கீழ் தரப்பட்டுள்ள தொலைபேசி எண்ணைத் தொடர்பு கொள்ளவும். அவரது உறவினர்கள் அவரைத் தொடர்புகொள்ள விரும்புகின்றனர்.

(16862)

**071 404 0640**

வைத்தியர் சஜிதரன்


# செஸ் தரவரிசை பட்டியல்

## பிரக்ஞானந்தா 9 இடங்கள் முன்னேற்றம்



பிடே உலகக் கிண்ண செஸ் போட்டி அஜர்பைஜான் தலைநகர் பாகுவில் நடைபெற்றது. இதில் தமிழகத்தை சேர்ந்த பிரக்ஞானந் தாவும், "நம்பர் ஒன்" வீரரும் 5 முறை உலக சம்பியனுமான மாக்னஸ் கார்ல் செனும் (நோர்வே) இறுதிப் போட்டிக்குள் நுழைந்தனர்.

இறுதிப்போட்டி இரு கிளாசிக்கல் ஆட்டத்தை கொண்டது. இறுதிப்போட்டியின் முதலாவது சுற்று 35 ஆவது நகர்த்தலில் டிராவில் முடிந்தது. இறுதிப்போட்டியின் 2 ஆவது சுற்றில் பிரக்ஞானந்தா கறுப்பு நிற காய்களுடன் விளையாடினார். ஒன்றரை மணி நேரத்தில் அதாவது 30 ஆவது காய் நகர்த்தலுக்கு பிறகு இருவரும் ஆட்டத்தை டிராவில் முடிக்க ஒப்புக் கொண்டனர்.

இதைத் தொடர்ந்து வெற்றியாளரை முடிவு செய்ய டைபி ரேக்கர் கடைபிடிக்கப்பட்டது. டைபிரேக்கரின் முதல் ஆட்டத்தில் தோல்வியும் 2 ஆவது ஆட்டத்தில் டிரா ஆனதால் பிரக்ஞானந்தா தோல்வியடைந்தார். கார்ல்சன் சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

இந்நிலையில் செஸ் உலக தரவரிசை பட்டியல் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது. உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் தோல்வியடைந்த தமிழக வீரர் பிரக்ஞானந்தா 29 ஆவது இடத்தில் இருந்து 20 ஆவது இடத்தை பிடித்துள்ளார். மற்றொரு தமிழக வீரர்களான குகேஷ் 8 ஆவது இடத்திலும் விஸ்வநாதன் ஆனந்த் 9 ஆவது இடத்திலும் உள்ளனர். (4)

## இந்திய மல்யுத்த சம்மேளனத்தின் அங்கீகாரம் ரத்து

இந்திய மல்யுத்த சம்மேளனத்தின் உறுப்பினர் அங்கீகாரத்தை உலக மல்யுத்த சங்கம் ரத்து செய்தது.

இந்திய மல்யுத்த சம்மேளனத்திற்கு தேர்தல் நடத்தப்படாததன் காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

ரத்து காரணமாகமல் யுத்த வீரர்கள் குறிப்பிட்ட நாடு என்பதை உரிமை. கொண்டாட முடியாமல் போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்திய மல்யுத்த சம்மேளனத்திற்கு தேர்தல் நடத்த வேண்டும் என உலக மல் யுத்த சங்கம் கடந்த மே மாதம் 30 ஆம் திகதி கடிதம் எழுதி இருந்தது. அதில், 45 நாட்களுக்குள் தேர்தல் நடத்தாவிடில் அங்கீகாரம் ரத்து செய்யப்படும் என எச்சரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (4)


31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த (29.07.2023) சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

**அமரர் திரு விநாசித்தம்பி சிங்கராசா**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (27.08.2023) சனிக்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் நாளை (28.08.2023) திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச்செய்தியறிந்து நேரிலும், தொலைபேசியூடாகவும் ஆறுதல் தெரிவித்த உள்நாட்டு வெளிநாட்டு உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மீசாலை வடக்கு, கொடிகாமம் (C-7142) குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர் திருமதி **கோ.கேதீஸ்வரன்** அவர்களின் தந்தையார்

**கார்த்திகேசு உருத்திரசுந்தரம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-7143)

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**

**யா/நாவற்குழி மகா வித்தியாலயம்**

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் திரு. இ.தயாகரன் ஆசிரியர் (பகுதித் தலைவர்) அவர்களின் அன்பு மனைவி

**திருமதி**

**பத்மலதா தயாகரன்**



அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(16861)

**இணுவில் மத்திய கல்லூரி**

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**

தோற்றம் 28.05.1975 மறைவு 25.08.2023


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

இந்த மாதத்தில் இதுவரையிலான காலப்பகுதியில் மாத்திரம் 100,000க்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகைத் தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாதத்தில் மாத்திரம் 22,667 இந்திய பிரஜைகள் வருகை தந்துள்ள நிலையில், இந்தியாவில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சீனாவில் இருந்து 7,896 பயணிகளும் ஜேர்மனியில் இருந்து 6,966 பயணிகளும் பிரான்சிலிருந்து 5,584, பயணிகளும் ரஷ்யாவில் இருந்து 5,296, பயணிகளும் இத்தாலியில் இருந்து 4,666, பயணிகளும் அவுஸ்திரேலியாவில் இருந்து 4,092 பயணிகளும் கனடாவில் இருந்து 3,988 பயணிகளும் வருகை தந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இந்த வருடத்தில் இதுவரையிலான காலப் பகுதியில் மாத்திரம் 877,867 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

# மசகு எண்ணெய் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை சற்று அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி, டபிள்யூ. ரி. ஐ மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை நேற்று 79. 83 அமெரிக்க டொலராகப்பதிவாகியுள்ளது.

மேலும், பிரென்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 84.48 அமெரிக்க டொலராகப்பதிவாகியுள்ளது.

அத்துடன், இயற்கை எரிவாயு பீப்பாய் ஒன்றின் விலையும் 2.54 அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

# ரயிலின் மிதிபலகையில் பயணித்தவர் 30 மீற்றருக்கு தூக்கி வீசப்பட்டார்

## களுத்துறையில் சம்பவம்

(கொழும்பு)

ரயிலின் மிதிபலகையில் நின்று பயணித்த நபர் ஒளி சமிஞ்ஞை கம்பத்துடன் மோதி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

மருதானையில் இருந்து ஹிக்கடுவை நோக்கி பயணித்த அதிவேக புகையிரதத்தின் மிதிபலகையில் நின்று பயணித்தபோதே களுத்துறை பகுதியில் உள்ள ஒளி சமிக்ஞை கம்பத்துடன் குறித்த நபர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளார்.

ஒளி சமிக்ஞை கம்பத்துடன் மோதிய நபர் சுமார் 30 மீற்றர் தூரத்துக்கு தூக்கி வீசப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்த நபர் களுத்துறை நாகொட போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதாகவும் அவர் மிகவும் கவலைக்கிடமான நிலையில் இருப்பதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (4)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் காங்கேசன் துறையில் (K.K.S) 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
புகையிரத நிலையத்தில் இருந்து 1 Km தூரத்தில்.

தொடர்புகளிற்கு (16854)

075 521 3533

## சொர்க்கம் திருமண சேவை

- கனடாவில் வசிக்கும் 30 வயது மிருகசீரிடம் நட்சத்திரம் மற்றும் 28 வயது மகம் நட்சத்திரமுடைய மணமகன்களுக்கு தகுந்த மணமகள்களை இலங்கையில் எதிர்பார்க்கின்றோம்.
- இலங்கையில் பிறந்த 28 வயது அவிட்டம் நட்சத்திரம் மற்றும் 19 வயது ரேவதி நட்சத்திரமுடைய மணமகள்களுக்கு தகுந்த மணமகன்களை வெளிநாட்டில் எதிர்பார்க்கின்றோம்.
- கனடாவில் வசிக்கும் 26 வயது மகம் நட்சத்திரம் மற்றும் 29 வயது சதயம் நட்சத்திரமுடைய மணமகள்களுக்கு தகுந்த மணமகன்களை கனடா/ இலங்கையில் எதிர்பார்க்கின்றோம்.

தொடர்புகொள்ள- 001 416 666 1855 (கனடா)
077 887 6969, 077 200 0230 (யாழ்ப்பாணம்) (16856)





## பள்ளி அறை சேர்வீரே

புள்ளி மயிலேறிடும்
வள்ளி மண வாளனே
வெள்ளி வடிவோடும் திருவீதி
வலம் வருவாயே
எங்கள் குறை தீர்க்கவே
வரம் தருவாயே
துள்ளி வரும் மானென வள்ளி தேவயானையுடன்
பள்ளி அறை சேர்வீரே
பரந்தாமா வடிவேலனே.

சி.ஜெயகௌரி.

## நம் துயர் தீர்த்திடய்யா

ஆடிவரும் மயிலேறும்
ஆணழகா- முருகா
நம் அவலங்கள் அடியோடு
மண்ணினிலே-மறைய
பாடியுனைப் பணிந்தோம்
பாலகனே வேலவா
பக்தர்களின் குறை தீர்க்கும்
பாங்கான துணைவா
தேடி வந்து உனை துதித்தோம்
தேவனே முருகையா
ஓடி வந்து வேலெடுத்து
நம் துயர் தீர்த்திடய்யா
ஓங்கார வேலவனே நல்லூரா.

க.நாகேஸ்வரா,
சண்டிலிப்பாய்.

# இராசிபலன்

27.08.2023
ஆவணி 10, ஞாயிற்றுக்கிழமை
ஏகாதசி பிற்பகல் 05.40மணிவரை

பூராடம் பின்னிரவு 02.43 மணிவரை
சுபநேரம் -09.05-10.35 மணிவரை
இராகுகாலம்-4.35-6.05 மணிவரை
ஏகாதசி விரதம்

சித்தாமிர்தம்
சந்திராஷ்டமம்-
மிருகசீரிடம்

வளவன்




குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், பூர்வீக சொத்து சம்மந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றமுண்டு.




உடல் நலன் சீராகி உற்சாகத்தோடு பணி புரிவீர்கள், மறைமுக எதிர்ப்புகள் மாறும், வரவேண்டிய பாக்கிகள் வந்து சேரலாம் ,காரிய அனுகூலமுண்டு.




ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள் எடுத்த காரியத்தை நிறைவேற்றுவதில் உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், போசன சுகமுண்டு.




பக்குவமாகப் பேசி காரியங்களை சாதிக்க வேண்டிய நாள், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், சயனசுகக் குறைவான சம்பவங்கள் இடம் பெறலாம்.




அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது, கேட்டஇடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.




பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், உள்ளம் மகிழும் சம்பவங்கள் இல்லத்தில் இடம்பெறலாம், சிறப்பான நாள்.




குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், நண்பர்கள் வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், பணப்புளக்கம் அதிகரிக்கும் நாள், உறவினர் வருகையுண்டு.




தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு.




தொழில்நலம் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்




பேச்சில் கனிவு பிறக்கும், பொருளாதார நிலையில்முன்னேற்றம் காணும் நாள், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், பயணங்கள் கைகூடும்




மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், இரவு பகல் பாராது பாடுபடுவீர்கள்.




பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள்.

ஆணுக்கு இணை[illegible] பெண்ணும் அருமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இணுவில் சைவத்திருநெறிக் கழகத்தின் நிர்வாக சபை உறுப்பினரும், சைவசமயப் பற்றாளரும், தமிழார்வம் மிகுந்தவரும் ஆகிய திரு. இ. தயாபரன் ஆசிரியர் (யா/ இணுவில் மத்திய கல்லூரி) அவர்களின் மனைவி

திருமதி. **பத்மலதா தயாபரன்** அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தி பெற அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம். (16855)

இணுவில் சைவத் திருநெறிக்கழகமும்
சிவகாமி அறநெறிப் பாடசாலைச் சமூகமும்.

## சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்வோருக்கு

## 792 கிலோ புகையிலை மீட்பு

(புத்தளம்)

புத்தளம் - தில்லையடி பகுதியில் நேற்று காலை கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது சுமார் 792 கிலோ கிராம் புகையிலை கைப்பற்றப்பட்டுள்ளன.

சட்டவிரோதமான முறையில் கடல் பகுதியினூடாக கொண்டு வரப்பட்டு கடற்கரையில் வைக்கப்பட்டிருந்த 23 பொதிகளிலிருந்து இவ் இலைகள் மீட்கப்பட்டன.



இதேவேளை சுமார் ஒரு இலட்சம் கிலோ கிராம் புகையிலை இலைகள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக ஒப்படைக்கப்படும் வரை கடற்படையின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

## நல்லூர் உற்சவகால தெய்வீக இசை அரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.இளங்கலைஞர் மன்றத்தின் நல்லூர் உற்சவகால தெய்வீக இசை அரங்கு நிகழ்வில் நாளை 28 ஆம் திகதி 6.45 மணிக்கு கீதாவாகினி இசைக்கல்லூரி நல்லூர் கிளையினரால் காவடிச்சிந்து குழு இசை நிகழ்வு நடைபெறவுள்ளது.

இதன்போது வயலின்-அ.கிருஸ்னாலினி, ஹார்மோனியம்-சு.அருணாசலம், மிருதங்கம் -சு.சிவகுமார், தபேலா- ச.ஜெனில்சங்கர், நெறியாள்கை - சு.பகீரதி ஆகியோரால் நிகழ்த்தப்படவுள்ளன.

தொடர்ந்து 7.15 மணிக்கு நடைபெறவுள்ள இசையரங்கு நிகழ்வில் பாட்டு-என்.ஞானச் செல்வன், வயலின்-அ.ஜெயராமன், மிருதங்கம்-க.சிவகுமார் ஆகியோர் இசைக்கவுள்ளனர். (4)

## குழந்தையின்மைக்கான இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

குழந்தையின்மைக்கான இலவச மருத்துவ ஆலோசனை முகாம் யாழ்ப்பாண லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் வீதியில் உள்ள லொயலாஸ் மண்டபத்தில் இன்று காலை 9 மணிமுதல் மாலை 3 மணி வரை இடம் பெறவுள்ளது. மருத்துவ முகாமில் இந்திய வைத்திய நிபுணர் தாட்ஷாயினி கலந்து கொண்டு மருத்துவ ஆலோசனைகளை வழங்கவுள்ளார். (4-104)

## கண்ணீர் அஞ்சலி



இணுவில் சைவத்திருநெறிக் கழகத்தின் நிர்வாக சபை உறுப்பினரும், சைவசமயப் பற்றாளரும், தமிழார்வம் மிகுந்தவரும் ஆகிய திரு. இ. தயாபரன் ஆசிரியர் (யா/ இணுவில் மத்திய கல்லூரி) அவர்களின் மனைவி

திருமதி. **பத்மலதா தயாபரன்** அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தி பெற அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம். (16855)

இணுவில் சைவத் திருநெறிக்கழகமும்
சிவகாமி அறநெறிப் பாடசாலைச் சமூகமும்.

## புத்தளம் கடற்கரையில் 792 கிலோ புகையிலை மீட்பு

(புத்தளம்)

புத்தளம் - தில்லையடி பகுதியில் நேற்று காலை கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது சுமார் 792 கிலோ கிராம் புகையிலை கைப்பற்றப்பட்டுள்ளன.

சட்டவிரோதமான முறையில் கடல் பகுதியினூடாக கொண்டு வரப்பட்டு கடற்கரையில் வைக்கப்பட்டிருந்த 23 பொதிகளிலிருந்து இவ் இலைகள் மீட்கப்பட்டன.



இதேவேளை சுமார் ஒரு இலட்சம் கிலோ கிராம் புகையிலை இலைகள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக ஒப்படைக்கப்படும் வரை கடற்படையின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

நல்லூர் உற்சவகால தெய்வீக இசை அரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.இளங்கலைஞர் மன்றத்தின் நல்லூர் உற்சவகால தெய்வீக இசை அரங்கு நிகழ்வில் நாளை 28 ஆம் திகதி 6.45 மணிக்கு கீதாவாகினி இசைக்கல்லூரி நல்லூர் கிளையினரால் காவடிச்சிந்து குழு இசை நிகழ்வு நடைபெறவுள்ளது.

இதன்போது வயலின்-அ.கிருஸ்னாலினி, ஹார்மோனியம்-சு.அருணாசலம், மிருதங்கம் -சு.சிவகுமார், தபேலா- ச.ஜெனில்சங்கர், நெறியாள்கை - சு.பகீரதி ஆகியோரால் நிகழ்த்தப்படவுள்ளன.

தொடர்ந்து 7.15 மணிக்கு நடைபெறவுள்ள இசையரங்கு நிகழ்வில் பாட்டு-என்.ஞானச் செல்வன், வயலின்-அ.ஜெயராமன், மிருதங்கம்-க.சிவகுமார் ஆகியோர் இசைக்கவுள்ளனர். (4)

குழந்தையின்மைக்கான இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

குழந்தையின்மைக்கான இலவச மருத்துவ ஆலோசனை முகாம் யாழ்ப்பாண லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் வீதியில் உள்ள லொயலாஸ் மண்டபத்தில் இன்று காலை 9 மணிமுதல் மாலை 3 மணி வரை இடம் பெறவுள்ளது. மருத்துவ முகாமில் இந்திய வைத்திய நிபுணர் தாட்ஷாயினி கலந்து கொண்டு மருத்துவ ஆலோசனைகளை வழங்கவுள்ளார். (4-104)

கண்ணீர் அஞ்சலி



இணுவில் சைவத்திருநெறிக் கழகத்தின் நிர்வாக சபை உறுப்பினரும், சைவசமயப் பற்றாளரும், தமிழார்வம் மிகுந்தவரும் ஆகிய திரு. இ. தயாபரன் ஆசிரியர் (யா/ இணுவில் மத்திய கல்லூரி) அவர்களின் மனைவி

திருமதி. **பத்மலதா தயாபரன்** அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தி பெற அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம். (16855)

இணுவில் சைவத் திருநெறிக்கழகமும்
சிவகாமி அறநெறிப் பாடசாலைச் சமூகமும்.

புத்தளம் கடற்கரையில் 792 கிலோ புகையிலை மீட்பு

(புத்தளம்)

புத்தளம் - தில்லையடி பகுதியில் நேற்று காலை கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது சுமார் 792 கிலோ கிராம் புகையிலை கைப்பற்றப்பட்டுள்ளன.

சட்டவிரோதமான முறையில் கடல் பகுதியினூடாக கொண்டு வரப்பட்டு கடற்கரையில் வைக்கப்பட்டிருந்த 23 பொதிகளிலிருந்து இவ் இலைகள் மீட்கப்பட்டன.



இதேவேளை சுமார் ஒரு இலட்சம் கிலோ கிராம் புகையிலை இலைகள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக ஒப்படைக்கப்படும் வரை கடற்படையின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 404
Viber 076 636 3378



# நீதித்துறையை விமர்சிக்கும் அதிகாரத்தை சரத்வீரசேகரவுக்கு வழங்கியது யார்?

**“இலங்கைத் திருநாட்டில் ஜனநாயகம் வாழ்கிறது எனின் அது நீதித்துறையின் புனிதத்தன்மையினையே எடுத்துக் காட்டுகிறது. அந்தளவிற்கு மக்கள் நீதித்துறை மீது அளப்பரிய நம்பிக்கையும் மதிப்பும் வைத்திருக்கிறார்கள்.”**



சட்டத்தின் முன் அனைவரும் சமம். சட்டம் இனம் பாராது, முகம் பாராது நீதி எதுவோ அதற்கே தலை வணங்கும். இதுவே உலக வரலாறு.

இலங்கை ஒரு ஜனநாயக நாடு. இங்கு ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் தூண்களில் நீதித்துறையும் ஒன்றாகப் பிரகடனப்படுத்தப் பட்டிருக்கிறது.

அந்தளவிற்கு நீதித்துறை புனிதமானது. அதில் மாற்றுக் கருத்துக்கு இடமேதும் இல்லை.

இலங்கைத் திருநாட்டில் ஜனநாயகம் வாழ்கிறது எனின் அது நீதித்துறையின் புனிதத்தன்மையையே எடுத்துக் காட்டும்.

அந்தளவிற்கு மக்கள் நீதித்துறை மீது அளப்பரிய நம்பிக்கையும் மதிப்பும் வைத்திருக்கிறார்கள் என்பதே உண்மையானது.

அவ்வாறான மக்களின் நம்பிக்கைத் தன்மைக்குரிய நீதித்துறையை யாரும் விமர்சிப்பார்களாக இருந்தால் நிச்சயம் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்வளே.

ஏனெனில் நீதிவழு தவறாமல் எந்தவித தலையீடுகளையும் ஏற்றுக்கொள்ளாமல் நீதித்துறை, நீதியின் வழி சுயாதீனமாக இயங்கிக் கொண்ருக்கிறது. இதையே மக்களும் விரும்புகின்றனர்.

இவ்வேளையில் நீதித்துறையை விமர்சிப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்காவிடின் அது நீதித்துறையை அவமதிக்கும் செயலாகவே அமையும்.

நிலை இதுவாக இருக்கையில் முல்லைத்தீவு குருந்தூர் மலை விவகாரம் கொதித்துக் கொண்டிருக்கும் நெருப்புக் குழம்பாய் இருக்கிறது. இவ்வேளையில் குருந்தூர் ஆதிசிவனுக்கு பொங் கல் நிகழ்வை மேற்கொள்வ தற்கு நீதிமன்றம் சில கட்டுப் பாடுகளை விதித்து அனுமதி வழங்கியிருந்தது.

நீதிமன்றின் கட்டளைப் படி குருந்தூர் மலை ஆதி சிவனுக்கு பொங்கல் வழிபாடுகள் நடத்த ஏற்பாடுகள் நடந்த நிலையில் அதைக் குழப்ப இனவாதிகள் சிலர் முயற்சித்திருந்தனர்.

அந்த வகையில் குருந்தூர் மலை ஆதி சிவனுக்கான பொங்கல் வழிபாட்டை தடுக்கும் வகையில் சிங்களவர்கள் குருந்தூர் மலையில் போராட்டம் மேற்கொள்ள வேண்டும் என அழைப்பு விட்டிருந்தார் பாராளுமன்ற உறுப்பினர் கம்மன்பில.

அதனைத் தொடர்ந்து பொங்கல் நடைபெறும் இடத்திற்கு வந்த சிலர் பொங்கலைக் குழப்ப முயற்சித்ததும் அதை பொலிஸார் தடுத்ததும் பௌத்த துறவி ஒருவர் அங்கு பெரும் அட்டகாசம் செய்ததும் நாம் அறிந்த விடயமே.

அதைத் தொடர்ந்து கடந்த 22 ஆம் திகதி பாராளுமன்றம் கூடிய போது அங்கு உரையாற்றிய சரத் வீரசேகர நீதித்துறையை விமர்சிக்கும் வகையில் பேசியதுடன் நீதிபதியை அவமதிப்பதாயும் அவர் மனம் நோகடிக்கும் வகையிலும் பேசியிருந்தார்.

அதாவது குருந்தூர் மலை ஆதி சிவனுக்கு பொங்கல் நிகழ்வை நடத்துவதற்கு அனுமதி அளித்த செயல் பௌத்தர்களை அவமதிக்கும் செயல் எனவும் முல்லைத்தீவு நீதிபதிக்கு மனநோய் உள்ளது. அவர் அதற்கு சிகிச்சை பெற வேண்டும் எனவும் அவர் நீதித்துறை மீதும் நீதிபதி மீதும் பெரும் குற்றச்சாட்டை முன் வைத்திருந்தார்.

இதில் என்ன விடயம் எனின் சரத்வீரசேகர மேற்கண்டவாறு பேசும் போது பாராளுமன்றில் அவரின் பேச்சை எவரும் கண்டிக்கவில்லை என்பது தான் வேதனைக்குரிய விடயம்.

ஒரு பாராளுமன்ற உறுப்பினர் தனது பாராளுமன்ற விசேட செல்வாக்கைப் பயன்படுத்தி நீதித்துறையையும் நீதிபதியையும் அவமதிக்கிறார். அங்கு அனைவரும் அமைதியாய் இருக்கின்றனர் எனின் அவர்கள் சரத்வீர சேகரவின் பேச்சை ஆமோதித்தற்கு சமமல்லவா?

சரத்வீரசேகரவின் குறித்த பேச்சைக் கண்டித்து நேற்று முன்தினம் வடக்கின் சட்டத்தரணிகள் நீதிமன்ற நடவடிக்கைகளை புறக்கணித்து ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் சரத் வீரசேகரவின் கருத்துக்கு கடும் கண்டங்களை வெளியிட்டதுடன் பாராளுமன்றில் பேசியதை வெளியில் வந்து பேசிப் பாருங்கள் பார்ப்போம் என சரத்வீரசேகரவுக்கு சவால் விடும் வகையில் கருத்துக்களைத் தெரிவித்திருந்தனர்.

நீதித்துறை மீது சரமாரியான குற்றச்சாட்டுக்களையும் விமர்சனங்களையும் முன்வைத்த சரத்வீரசேகரவின் பாராளுமன்றப் பதவியை பறிக்க வேண்டும் என்ற கருத்து மக்கள் மத்தியில் எழ ஆரம் பித்து விட்டது.

ஜனநாயக நாட்டின் எந்தவித தலையீடுகளையும் தவிர்த்து சுயாதீனமாக நீதியை நீதி வழிநின்று காக்கும் நீதித்துறையை விமர்சிக்கும் சரத்வீரசேகர, நீதிபதி மனநல மருத்துவரை நாட வேண்டும் என்று தெரிவித்திருந்தார். உண்மையில் யார் மன நலம் பாதிக்கப்பட்டிருக்கிறார், யார் மனநல மருத்துவரை நாட வேண்டும் என்பது மக்களுக்கு நன்கு தெரியும்.

இதை சரத்வீரசேகர புரிந்து கொண்டு செயற்பட்டால் நன்மை அவருக்கே.

அபிமன்யு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

சந்திரனில சந்திரயான்-3 கால்பதித்திருக்குது. இந்த வெற்றியைப் படைத்த இந்திய தேசத்துக்கு ஈழத் தமிழ் மக்கள் சார்பில் நாங்களும் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கங்காணி-** உண்மைதான். இந்தியா குறைந்த செலவில் சந்திரயான்-3 ஐ சந்திரனில் இறக்கி இருக்குது. அதிலும் சந்திரனின்ர தென் பகுதியில சந்திரயான்-3 கால் பதித்தது இந்தியாவுக்கு மிகப் பெரிய வெற்றி. அதிலும் சந்திரயான் -3 ஐ சந்திரனில இறக்குகின்ற திட்டத்திற்குத் தலைவராக இருப்பவர் வீரமுத்துவேல் என்ற தமிழர். அந்தப் பெருமையால் ஈழத் தமிழ் உறவுகளாகிய நாங்களும் பூரித்துப் போயுள்ளோம்.

**மூப்பர்-** அது மட்டுமல்ல கங்காணியார், வீரமுத்துவேல் ஊடகங்களுக்கு வழங்கிய பேட்டியைக் கேட்டிருப்பியள் எண்டு நினைக்கிறன்.

ஏழ்மை, உயர் கல்விக்கு வழிப்படுத்த ஆளில்லாத நிலைமை என்ற எத்தனையோ கஷ்டங்களைக் கடந்துதான் இன்றைக்கு இந்த சாதனையை வீரமுத்துவேல் படைத்திருக்கின்றார்.

உண்மையில அவரின்ர பேட்டியை எங்கட இளைஞர்களும் மாணவர்களும் கேட்க வேணும்.

எங்களிட்டயும் நிறைய மாணவர்கள் அடிப்படை வசதிகள் இல்லாமல் வாழ்கினம்.

அவர்கள் மனம் தளராமல் கல்வியைத் தொடர்வதற்கு வீரமுத்துவேலின்ர பேட்டி பக்க துணையாக இருக்கும்.

இவ்வாறு மூப்பர் கூறியதும் ஆலடியில் மீண்டும் அமைதி நிலவியது.

அமைதியைக்குலைக்க, விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்-** அது சரி, இனப்பிரச்சினைக்கான தீர்வு - பேச்சுவார்த்தை- சர்வகட்சிக் கூட்டம் எல்லாம் நிண்டு போயிட்டுதோ.

**சிறாப்பர்-** உதுகளெல்லாம் உலக நாடுகளை ஏமாற்றுகிற நாடகங்கள் தானே.



## இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு இப்போது தவணை விடுமுறை

அந்த நாடகத்திற்கு எங்கட தமிழ் அரசியல் தரப்புகளும் தாளம் போடுவினம்.

நாடகம் நிண்டு போனதும் அவர்களும் அமைதியாகிவிடுவினம்.

**சாத்திரியார்-** சிறாப்பர் சொல்லுறது நூறு வீதம் சரி. உண்மையில இனப் பிரச்சினைக்குத் தீர்வு தேவையானவர்கள் நாங்கள்.

அவர்களைப் பொறுத்தவரை இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணாமல் காலம் கடத்துவது தான்.

ஆக, எங்களுக்குத் தேவையான உரிமைக்காக நாங்கள் தான் குரல் கொடுக்க வேணும். ஆனால் அதனை நாங்கள் தொடர்ச்சியாகச் செய்வதில்லை.

எங்களுக்கு எப்பநேரம் கிடைக்குதோ. எங்களுக்கு எப்ப குரல் கொடுக்க வேணும் போல இருக்குதோ அப்பத்தான் நாங்கள் விழித்தெழுவம்.

**கங்காணி-** உண்மைதான். இந்தாப் பாருங்க இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும் எண்டு சொன்ன ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதுவும் செய்ய முடியாமல் இருக்கிறார்.

அதோட, இப்ப அவர் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது பற்றிக் கதைப்பதும் இல்லை.

அதால எங்கட அரசியல் வாதிகளும் அமைதியாக இருக்கினம்.

**விதானையார்-** இதுதான் எங்கட தமிழற்ற பலவீனம். ஒரு விடயத்தை எடுத்தால், அது தொடர்பில ஓயாமல் கதைக்க வேணும். அதை அடைவதற்கான வழி வகைகளைக் காண வேணும்.

எங்களுக்கு சப்போட் செய்யக் கூடிய நாடுகளோட நாங்கள் பேச வேணும்.

இதைவிட்டிட்டு ஏதோ பாடசாலைத் தவணை விடுமுறைபோல இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணுகின்ற விடயத்திற்கும் நாங்கள் விடுமுறை கொடுக்கிறம்.

**மூப்பர்-** விதானையார் சொல்லுறதில நியாயம் இருக்கத்தான் செய்யுது. ஆனால் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பில ஏதேனும் முயற்சி முன்னெடுக்கப்பட்டால் போதும். ஒவ்வொரு தமிழ்க் கட்சிகளும் அது தான் தீர்வு. இது தான் தீர்வு எண்டு கங்கணம் கட்டுகிறதோட விவாத மேடைகளும் களைகட்டும்.

ஆனால் அதே முயற்சி முடிந்து போனால் அவ்வளவு தான். அதன் பிறகு எங்கட ஆட்களும் அமைதியாக இருப்பினம்.

இது தான் இவர்கள் தொடர்பில பலத்த சந்தேகத்தை ஏற்படுத்துது.

**சிறாப்பார்-** ஓ! இப்ப தேர்தலில வெல்ல முடியாமல் போனால் அவர்களுக்கு பொது மக்களும் பொது அமைப்புகளும் தேவைப்படும்.

அதேநேரம் தேர்தலில வெற்றி பெற்று பாராளுமன்ற ஆசனம் கிடைத்து விட்டால். அவ்வளவு தான்.

தாங்கள் முன்பு கதைத்ததையும் மறந்து, மக்களையும் மறந்துவிடுவினம் என்ற உண்மை எங்கட அனைத்து தமிழ்க் கட்சிகளுக்கும் சொந்தமான தென்பதை நாங்கள் இப்ப கண்டறிந்திட்டம்.

இவ்வாறு சிறாப்பர் கூறியதும் ஆலடியில் அமைதி நிலவியது.

அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்-** நல்லூர் கோயில் வீதியில உள்ள ஒரு அவனியுவில இருப்பவர்கள் எல்லாரும் சேர்ந்து பொலிஸ் அதிகாரிகளுக்கு கடிதம் ஒன்றை அண்மையில அனுப்பியிருக்கினம்.

அதில, ஐயா! இதுகாறும் ஒற்றுமையாக இருந்த எங்களுக்கு ஒரு பெரும் இடைஞ்சல் வந்துள்ளது.

பெண்ணொருவர் எங்கட அவனியுவில வந்து வீடு கட்டி இருக்கிறார். அவர் எங்களுக்கு மிகப் பெரும் கொடுமை செய்கிறார். எங்கள நிம்மதியாக இருக்க விடுகிறார் இல்லை.

எங்கள் தொடர்பில பொலிஸில முறைப்பாடு செய்யிறது. நீதிமன்றத்தில வழக்குப்பதிவு செய்யிறது.

தனக்கு இருக்கக் கூடிய உயர் மட்டச் செல்வாக்கைப் பயன்படுத்தி அட்டகாசம் செய்யிறது என கடும் நிட்டூழியங்கள் நடக்குது.

இதுக்கு ஒரு முடிவு கட்டுங்கள் எண்டு அந்தக் கடிதத்தில அந்த அவனியுவில இருக்கிறவர்கள் கேட்டிருக்கினம்.

**மூப்பர்-** ஓ! இது பற்றி நானும் அறிந்தனான். அந்த அவனியுவில இருக்கிறவர்கள் அந்த நபரால மிகக் கஷ்டப்படுகினம் எண்டு.

ஆகையால இது விடயத்தில பொலிஸார் தக்க நடவடிக்கை எடுத்து அந்த மக்கள் நிம்மதியாக இருப்பதற்கு வழி செய்ய வேண்டும்.

இவ்வாறு மூப்பர் கூற, அதனை ஆலடி தீர்மானமாக நிறைவேற்ற; அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






உலகின் மூத்த தமிழ் குடி காத்த பனை மரத்தின் அழிவைத் தடுக்க முடியுமா?

**மகாலட்சுமி — கொக்குவில்**

**மாற்றம் ஒன்றே மாறாதது என்பதன் அர்த்தம் என்ன வியாசரே?**

மாற்றம் என்பது இந்த உலகில் நடந்து கொண்டுதான் இருக்கும். அதற்கு பழக்கப்பட்டு தன்னை அதனூடே மாற்றி மனிதன் பயணிக்கிறான் என்பதே அதன் பொருள்.

அதாவது 1970 களில் இருந்த யாழ். நகரை நினைத்துப் பாருங்கள். அப்போது இருந்தது போல இப்போது இருக்கிறதா? இல்லையே. மாற்றங்கள். எப்பேற்பட்ட மாற்றங்கள் ஏற்பட்டு விட்டன.

ஆயினும் மனிதன் மாறவில்லை அப்ப டியே இருக்கிறான். நிகழும் மாற்றத்துக்கு ஏற்றாற் போல தன்னை மாற்றி அது செல்லும் வழி சென்றுகொண்டிருக்கிறான்.

இறப்பு என்னும் மாற்றம் நடக்காவிடின் இந்த உலகு எப்படி இருக்கும். மறதி என்ற மாற்றம் இல்லாவிடின் மனித மனங்கள் எப்படி இருக்கும் சிந்தித்துப் பாருங்கள் விடை கிடைக்கும்.

**கணேஷ் — பருத்தித்துறை**

**இலங்கை முன்னேற்றப் பாதையில் முன்னேறி செல்லுமா வியாசரே?**

ஒரு வீட்டின் குடும்பத்தைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் அந்த வீட்டின் வேலியும் நாயும் விடை சொல்லும் என எனது பாட்டனார் அடிக்கடி கூறுவார். நான் அவதானித்த வரை அது உண்மைதான்.

இதுபோல தான் நாடும். இரண்டு இனம் ஒரு நாடு. இதில் பெரும்பான்மையினருக்குத்தான் இந்த நாடு சொந்தம் என வெளிப்படையாகக் கூறுபவர்கள் இருக்கும் வரை இந்த நாடு உருப்படுமா? சொல்லுங்கள்? ஒருநாளும் முன்னேறாது.

இந்த நாடு அனைவருக்கும் சொந்தம் என்ற மனநிலை ஆட்சியாளர்களுக்கும் இனவாதிகளுக்கும் எப்போது தோன்றுகிறதோ அப்போதே எமது நாடு முன்னேற்றப் பாதையில் நடை போடும். அதுவரைக்கும் வாய்ப்பில்லை ராஜா.

**ரிதுஷ் — வதிரி**

**சந்திரயான் நிலவில் தடம்பதித்தது பற்றி என்ன நினைக்கிறீர்கள் வியாசரே?**

உலக வரலாற்றில் இந்தியா ஒரு படி மேல் எழுந்து, நிமிர்ந்து நிற்கிறது சந்திரயான் தரையிறக்கத்தால்.

ரஷ்யா இந்தியாவுக்கு முதல் தான் தனது ஓடத்தை நிலவில் தரை இறக்க வேண்டும் என போட்டி போட்டு நிலவுக்கு ரொக்கேட் அனுப்பியது. அதன் முடிவு படுதோல்வியாக அமைந்தது.

இந்தியாவின் சாதனை மற்றைய நாடுகளுக்கும் நல்ல சக்தியை வழங்கியுள்ளது. இந்தியா உலக வல்லரசாகத் தன்னை நிலை நிறுத்தி விட்டது. இது இந்தியர்கள் அனைவரும் பெருமை கொள்ளும் விடயம்.

இத்திட்டத்திற்கு மூளையாக இருந்தது ஒரு தமிழர் என்பது தமிழராகிய எமக்கும் பெருமை.

**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**சுதன் — குப்பிழான்**


**இனவாதமும் மதவாதமும் நிறை ந்த ஆட்சியை அமெரிக்கா இன்னும் உன்னிப்பாக அவதானிக்கிறதாமே?**

உலக வல்லரசுகளின் மனநிலையை நாம் இன்னமும் புரிந்து கொள்ளவில்லை. அவர்களுக்கு தமிழினத்தின் அழிவு, அவர்களுக்கான நீதி மறுப்பு, அவர்களின் சுதந்திரங்களை வழங்காமை என்பன ஒரு பொருட்டே இல்லை.

ஆனால் தமது தேவையை நிறைவேற்ற இப்படிப்பட்ட விடயங்களைக் கையில் எடுப்பார்கள். அதன்மூலம் ஆட்சியாளர்களை வெருட்டி தமது செயற் பாட்டை நிறைவேற்றி விடுவார்கள்.

நாங்களும் இதோ சர்வதேசம் வருகிறது. எமக்கு தீர்வை வாங்கித் தரப் போகிறது என அண்ணாந்து, ஆவென்று இருப்போம்.

தமிழினத்தின் பிரச்சினையை தீர்க்க வேண்டும் என சர்வதேசம் நினைத்திருந்தால் வன்னியில் இத்தனை இலட்சம் தமிழினம் அநியாயமாக கொன்றொழிக்கப்பட்டிருக்காது.




சந்திரயான் நிலவில் தடம்பதித்தது பற்றி என்ன நினைக்கிறீர்கள் வியாசரே?

**மதுவன் — மீசாலை**

**நீதிமன்றையும் நீதிபதியையும் அவமதிக்கும் சரத் வீரசேகரவுக்கு தண்டனை ஏதும் இல்லையா?**

என்ன செய்வது நீதிமன்றம் தமிழ் பிரதேசத்தில் இருக்கிறது. நீதிபதியும் தமிழர். ஆதலால் சரத்வீரசேகர கண்டமேனிக்குப் பேசுகிறார். அவர் பேசுவதை மற்றவர்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கின்றார்கள்.

இவ்வாறு ஒரு தமிழர் நீதிமன்றை அவமதித்துப் பேச அதற்கு நடவடிக்கை எடுக்காமல் இருந்திருந்தால் எத்தனை பேர் எத்தனை விதமாகப் பேசியிருப்பார்கள். எத்தனை போராட்டங்களை நடத்தியிருப்பார்கள். சரத் வீரசேகர போன்ற இனவாதிகளை இந்த சமூகம் ஏற்றுக்கொள்ளக் கூடாது. அவ்வாறு ஏற்றுக் கொண்டால் அது மீண்டும் இனக் கலவரம் ஏற்பட விரும்புபவர்களாகவே கருதப்படும்.

**சுரேன் — பத்தமேனி**

**வறண்ட காலம் என்பதால் வயல் நிலங்கள், புல்வெளிகளை எரியூட்டுகிறார்களே. இதனால் பாதிப்பு ஏற்படுமா?**

வயல் நிலங்களை எரியூட்டுபவர்களுக்கு மானியங்கள் ஏதும் வழங்கப்பட மாட்டாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

உண்மையில் இந்த திட்டம் சரியானதே. எந்தவித மனசாட்சியும் இன்றி வயல் நிலங்களை எரியூட்டி விடுவது எப்பேற்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை ஏனோ நாம் புரிந்து கொள்ளத் தவறி விடுகிறோம்.

அண்மையில் காட்டிற்கு தீ வைத்த காதல் ஜோடியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஏன் இவர்கள் இவ்வாறு செயற்படுகிறார்கள் என்பது புரியவே இல்லை.

**திகான் — வடமராட்சி**

**உலகின் மூத்த தமிழ் குடி காத்த பனை மரத்தின் அழிவைத் தடுக்க முடியுமா?**

பனை, தமிழினத்தின் அடையாளம். எம் பண்பாடு கலாசாரத்துடன் பின்னிப் பிணைந்த உறவுக்காரன். எம் கலாசாரத்தின் பிரதிபலிப்பு. ஆனால் போரின் உச்சத்தால் முதலில் அழிவடைந்தது எம் முதுசங்களான பனை மரங்களே.

மில்க்வைற் கனகராஜா ஐயா அவர்கள் பனை மீது மிகுந்த பற்றுக் கொண்டவர்.

அவர் எங்கு சென்றாலும் அவரின் காரின் டிக்கியில் இரண்டு மூடை பனங்கொட்டைகள் இருக்குமாம்.

தரிசு நிலங்களைக் கண்டால் காரை நிறுத்தி விட்டு பனங்கொட்டைகளை எடுத்து ஆங்காங்கே வீசி விடுவாராம்.

நாம் பனை மரங்களைப் பாதுகாக்க வேண்டும். பனை அழிந்தால் எம் பண்பாடு கலாசாரம் அழிந்து விட்டது என்பதே பொருள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

**திரைப்படம்: பெரிய இடத்து பெண்**
**பாடகர் : டி.எம்.சௌந்தரராஜன், பி.சுசீலா**
**இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்**
**இயற்றியவர்: கண்ணதாசன்**



அன்று வந்ததும் இதே நிலா
இன்று வந்ததும் அதே நிலா

என்றும் உள்ளது ஒரே நிலா
இருவர் கண்ணுக்கும் ஒரே

ஆஆ இருவர் கண்ணுக்கும் ஒரே
நிலா அன்று வந்ததும் இதே நிலா

இன்று வந்ததும் அதே நிலா
என்றும் உள்ளது ஒரே நிலா

இருவர் கண்ணுக்கும் ஒரே நிலா
ஆஆ இருவர் கண்ணுக்கும் ஒரே நிலா
அம்பிகாபதி கண்ட நிலா
அமராவதியைத் தின்ற நிலா

அம்பிகாபதி கண்ட நிலா
அமராவதியைத் தின்ற நிலா
கம்பன் பாடிய வெள்ளி நிலா
கவியில் ஆடிய பிள்ளை நிலா

அன்று வந்ததும் இதே நிலா...

காதல் ரோமியோ கண்ட நிலா
கன்னி ஜூலியட் வென்ற நிலா
காதல் ரோமியோ கண்ட நிலா
கன்னி ஜூலியட் வென்ற நிலா

பாவை லைலா பார்த்த நிலா
பாலை வனத்தின் வண்ண நிலா
பாவை லைலா பார்த்த நிலா
பாலைவனத்தின் வண்ண நிலா ஆஆஆ

நாடுதோறும் வந்த நிலா
நாகரிகம் பார்த்த நிலா
நாடுதோறும் வந்த நிலா
நாகரிகம் பார்த்த நிலா

பார்த்து பார்த்து.சலித்ததிலா
பாதி தேய்ந்தது வெள்ளி நிலா
அன்று வந்ததும் இதே நிலா...

# சரித்திரம் படைத்த சந்திரயான்


நிலவின் சரித்திரத்தில் இந்தியாவின் பெயர் அழுத்தமாக ஓகஸ்ட் 23 ஆம் திகதி எழுதப்பட்டு விட்டது. சந்திரயான் - 3 விண்கலம் திட்டமிட்டபடி வெற்றி பெற்றுள்ளது.

1,750 கிலோ எடை கொண்ட விக்ரம் லேண்டர் தன் நான்கு கால்களையும் அழுத்தமாகப் பதித்து நிலவின் பரப்பில் இறங்கி நிற்கிறது. அதைத் தொடர்ந்து நர்ன்கு மணி நேரம் கழித்து, அதன் வயிற்றிலிருந்து பிரக்யான் என்று பெயரிடப்பட்ட ரோவர் வாகனம் வெளியில் வந்தது. 26 கிலோ எடையுள்ள இந்த ரோவர், ஒரு நொடிக்கு ஒரு செண்டிமீற்றர் தூரம் என்ற வேகத்தில் நகர்ந்து சென்று நிலவில் தன் ஆராய்ச்சியைத் தொடங்கி விட்டது. சந்திரயான் - 3 திட்டத்துக்காக இந்தியா செலவிட்டிருக்கும் தொகை, 613 கோடி ரூபாய். கிட்டத்தட்ட நான்கு ஆண்டுகள் உழைப்பு.

இஸ்ரோ அமைப்பில் ஒரு பெரிய குழுவே இதற்காக இரவு, பகலாக வேலை பார்த்தது. ஆனால், விக்ரம் லேண்டர் மற்றும் பிரக்யான் ரோவர் ஆகியவற்றின் ஆயுள்காலம் வெறும் 14 நாட்கள் மட்டுமே என்று சொல்லப்படுகிறது.

இதைத் தொடர்ந்து இப்போது பலரும் எழுப்பும் கேள்விகள் இரண்டு. இதற்காகவா இத்தனை கோடிகள் செலவழிக்க வேண்டும்? ஏன் இவற்றின் ஆயுள்காலம் 14 நாட்கள்?

இதற்கு விடை தேட, நிலவின் சீதோஷ்ண நிலையைப் புரிந்து கொள்ள வேண்டும். பூமி தன்னைத் தானே 24 மணி நேரங்களுக்கு ஒருமுறை சுற்றிக் கொள்கிறது என பது நாம் அறிந்ததே. இதையே நம் கணக்கில் ஒரு நாள் என்கிறோம். நிலா தன்னைத் தானே சுற்றிக் கொள்ள நம் கணக்கின்படி 29.5 நாள் ஆகிறது. அதில் சுமார் பாதி அளவான 14 நாட்கள் என்பது நிலவின் ஒரு நாளாகக் கணக்கிடப்படுகிறது.



விக்ரம் லேண்டர் நிலவின் தென்துருவப் பகுதியில் இறங்கியுள்ளது. அங்கு நிலவுக் கணக்கின்படி ஒரு நாள் பகல் இருக்கும், ஒரு நாள் முழுக்க இரவு இருக்கும். விக்ரம் லேண்டர் போய் இறங்கிய ஓகஸ்ட் 23 ஆம் திகதி அங்கு பகல் தொடங்கியது. அடுத்த 14 நாட்களும் அங்கு வெளிச்சம் இருக்கும். சூரிய சக்தி பேனல்களைப் பயன்படுத்தி மின்சாரம் உருவாக்கி தம் செயற்பாட்டுக்குப் பயன்படுத்தும் விதமாக விக்ரம் லேண்டரும் பிரக்யான் ரோவரும் வடிவமைக்கப்பட்டுள்ளன. எனவே, சூரிய வெளிச்சம் இருக்கும் 14 நாட்களும் இவை தொடர்ந்து செயற்பட முடியும்.

அதன்பிறகு 14 நாட்கள் அந்தப்பகுதி இருளில் மூழ்கிவிடும். சூரிய சக்தி பேனல்கள் மின்சாரத்தை உருவாக்காது. எனவே, இந்த இரண்டுமே செயலிழந்துவிடும். அந்த இரவு நேரத்தில் -233 டிகிரி சென்டிகிரேட் வரை வெப்பநிலை தாறுமாறாகக் குறைந்துவிடும். தொடர்ந்து 14 நாட்கள் இந்தச் சூழலை இவை தாக்குப் பிடிக்குமா என்பது தெரியாது. உறையவைக்கும் இந்தச் சூழலைத் தாங்கி அவை பத்திரமாக ஜீவித்திருக்குமா என்பது சந்தேகம் தான். ஒருவேளை அந்த 14 நாட்கள் நீளமான இரவு முடிந்து விக்ரமும் பிரக்யானும் மீண்டும் வெயில் வரும்போது சூரியசக்தி கிடைத்து உயிர் பெற்றால் ஆச்சரியம்தான். அப்படி நடந்தால் மேலும் 14 நாட்கள் அவை ஆராய்ச்சியைத் தொடர முடியும். இதற்கான சாத்தியங்களும் இருப்பதால்தான், "இன்னொரு நிலவு நாள் வரையில் அவை ஆராய்ச்சி செய்ய வாய்ப்புகள் உள்ளன" என்று இஸ்ரோ தலைவர் சோம்நாத் கூறியுள்ளார்.

அப்படி நடந்தால், 14 நாட்கள் ஆராய்ச்சிக்குப் பிறகு 14 நாட்கள் இடைவெளி விட்டு மீண்டும் 14 நாட்கள் அவை ஆராய்ச்சி செய்யும்.

நிலவின் தென் துருவத்துடன் ஒப்பிடும் போது அதன் மையப்பகுதியில் சூரிய வெளிச்சம் நீண்ட நேரம் இருக்கும். ஆனால், அங்குமே கூட மற்ற நாடுகளின் ரோவர்கள் அதிக நாட்கள் தாக்குப் பிடித்தது கிடையாது. அதிகபட்சமாக அமெரிக்கா அனுப்பிய ரோவர் ஒன்று 40 கி.மீ தூரம் வரை பயணம் செய்தது. அதன்பிறகு தொடர்பறுந்து தொலைந்து விட்டது.

தெரியும் நிலா, உண்மையில் கடினமான பாறைகளும் பள்ளங்களும் நிறைந்த மிக மோசமான தரைப்பகுதியைக் கொண்டது. ரோவர் நிலை தடுமாறி ஒரு பள்ளத்தில் விழுந்தாலும் ஆயுள் முடிந்தது. இப்படிப்பட்ட சவாலை, நிலவின் மிக மோசமான தென் துருவத்தில் எதிர்கொண்டிருக்கிறது பிரக்யான் ரோவர்.

இவ்வளவு சவாலான தென்துருவத்துக்கு நாம் ஏன் போக வேண்டும்? ஏனெனில், அதுதான் இதுவரை யாராலும் ஆராயப்படாத பகுதி. நிலவில் தண்ணீர் இருப்பதற்கான வாய்ப்புகள் உள்ளதை சந்திரயான் - 1 விண்கலம் இந்தப் பகுதியில்தான் உணர்ந்தது. இப்போது பிரக்யான் ரோவரும் அங்கிருக்கும் மண் மற்றும் பாறைகள், அவற்றின் வேதியியல் தன்மை, வெப்பநிலை, அயனிகள் மற்றும் எலெக்ட்ரான்களின் அடர்த்தி என்று பலவற்றை ஆராய்கிறது.


எதிர்கால நிலவுப் பயணங்களுக்கும் இன்னும் தொலைதூர கிரகங்களின் மர்மங்களுக்கு விடை தேடும் ஆராய்ச்சிகளுக்கும் விண்கலங்களை பூமிக்கு அப்பால் கொண்டு சென்று நிலை நிறுத்தும் திறனை தீர்க்கமாகப் பெறுவதற்கும் இந்த ஆராய்ச்சிகள் அவசியம்.

உண்மையில் இதை இந்தியா மிகக் குறைந்த செலவில் சாத்தியமாக்கியுள்ளது.

# வெற்றியில் திளைக்கும் தமிழன்

சந்திரயான்-3 விண்ணில் ஏவப்பட்டு, வெற்றிகரமாக நிலாவில் தரையிறங்கியது. இந்த வெற்றிச் செய்தி குறித்து பகிர்ந்த திட்ட இயக்குநர் வீரமுத்துவேல், இத்திட்டத்தில் பணியாற்றி அனைத்து விஞ்ஞானிகளுக்கும் பொறியியலாளர்களுக்கும் தனது நன்றியைத் தெரிவித்தார்.

"நான் ஒரு சாதாரண மனிதன். என்னால் இந்த அளவுக்கு வர முடியும் என்றால், எல்லோராலும் வர முடியும். வாய்ப்புகள் எல்லோருக்கும் இருக்கிறது. அதனை நாம் எப்படி பயன்படுத்திக் கொள்கிறோம் என்பது நம் கையில் தான் இருக்கிறது." "என்னைப் பொறுத்தவரக்கும் சுய ஒழுக்கம், 100% ஈடுபாடு, எதிர்பார்ப்புகளில்லா கடின உழைப்பு, நம்மிடம் இருக்கின்ற தனித்தன்மை நமக்கு நிச்சயம் வெற்றியைப் பெற்றுத் தரும். கடின உழைப்பு எப்போதும் வீண்போகாது." இப்படித் தான் தனது வெற்றியின் ரகசியத்தை பற்றி விபரிக்கிறார் சந்திரயான் 3 இன் திட்ட இயக்குநர் வீரமுத்துவேல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்நுட்பம் என்பது மனிதனை முன்னேற்றும் ஏணிப் படியாய் இருக்க வேண்டுமே தவிர அது மனிதனை அவனது சுயத்தில் இருந்து பிரித்தெடுக்கும் கருவியாய் இருக்ககூடாது.

தொழில்நுட்ப வளர்ச்சியின் உச்சத்திற்கு தன்னை இணையாக்க முயற்சிக்கும் மனிதன் தன் சமூக விழுமியங்களில் இருந்து பிரித்தெறியப்படுவது ஒருநாளும் நன்மையைத் தரவல்லதல்ல.

மனித குலம் எங்கே போய்க் கொண்டிருக்கிறது என எண்ணிப் பார்த்தால் வியப்புடன் பயப்பீதி அதிகரிக்கவே செய்கிறது.

இந்தியாவின் சந்திரயான் விண்கலம் நிலவில் கால்பதித்து விட்டது. உலக வரலாற்றில் இந்தியா தன்னை உலக வல்லரசு என ஆணித்தரமாக அறிவித்தல் விடுத்த செயலாக பார்க்கப்படுகிறது.

உலக வல்லரசுகள் பூமியை விடுத்து வேற்று கிரகத்தில் எப்படி யாவது கால்பதித்து விடவேண்டும் என்பதில் முழு மூச்சாய் நிற்கின்றனர்.

ஏனென்றால் இந்த உலகம் அழிவின் விளிம்பில் இருக்கிறது. அவ்வாறு உலகம் அழிய நேர்ந்தால் மனித குலத்தை வேற்று கிரகத்தில் தடம் பதிக்க அது ஏதுவாக அமையும் என்பது அவர்கள் கருத்தாக இருந்தாலும் இவை மனிதனின் இறைவன் தொடர்பான நம்பிக்கைகளை சுக்குநூறாக உடைத்தெறியும் செயற்பாடுகளே.

ஏலவே மனிதன் தொழில்நுட்பத்துக்குள் தன்னை புகுத்த நினைத்து தன் சுயத்தை இழந்து கொண்டிருக்கும் வேளையில்

# நம்பிக்கைகளை சுக்குநூறாக்கும் சுத்தியல்கள்

இது புதுவித பிரம்மையை தோற்றுவித்து விடும் என்பது மெய்.

கடவுளைத் தேடும் மனிதனின் பயணத்தில் பக்திமயம் சற்றும் இல்லாது போவதுதான் வேதனை.

ஆலயத்திற்குள் ஆடை கழைவது என்பது மனிதன் தன் ஆணவத்தைக் கழைவதற்கு ஒப்பானது. ஆனால் இன்று ஆடை கழையப்பட்டாலும் மனித மனங்களின் ஆணவம் அப்படியே தான் இருக்கிறது. அதில் மாற்றம் ஏதும் இல்லை.

கோவிலில் இருகரம் கூப்பி இறைவனை நினைத்து கும்பிடும் கலாசாரம் அற்றுப் போக, தொலைபேசியை உயர்த்தி ஒளிப் படம் எடுக்கும் கலாசாரம் மேலோங்கி நிற்பதற்குள் இருக்கும் இறையியலின் நலினத்தனத்தை எப்படி கூறி விடமுடியும்.

ஆண்டவனின் சந்நிதானத்தில் பிற பேச்சின்றி அவனையே நினைத்திருக்கும் நிலை மாறி அவள் பிடவை அழகு, இவள் நெக்லஸ் நல்ல டிசைன்ஸ் என்றாகி விட்டது.

இதுதான் தொழில்நுட்ப வளர்ச்சியா? இதுதான் நவீன மயமாக்கலா?

மனிதன் முதலில் தன்னை உணர்ந்து கொள்ள வேண்டும். அதனூடே மற்றவரைப் புரிந்து கொள்ள வேண்டும்.

கோபம் மனிதனை, மனித குலத்தை இல்லாதொழிக்கும் பேரரக்கன் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அப் போதே மனிதன் மனிதனாய் வாழ்வான்.

மாவை நா.கஜேந்திரன்.





# அரசியல் சூழ்ச்சிகளால் தள்ளிப்போகும் தேர்தல்

## பாகிஸ்தானில் நடப்பது என்ன?

பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தத்தளித்துக் கொண்டிருக்கிறது பாகிஸ்தான். அந்த நாட்டின் பவர்ஃபுல் அரசியல்வாதியான இம்ரான்கான் சிறை வாசத்திலிருக்க, ஷெபாஸ் ஷெரீஃப் தலைமையிலான ஆட்சி கலைக்கப்பட்டு, இடைக்கால அரசு பதவி யேற்றிருக்கிறது. அசாதாரண சூழல் நிலவும் பாகிஸ் தானில் அரசியல் களம் எப்படியிருக்கிறது?

2018 பொதுத்தேர்தலில் வென்று ஆட்சியமைத்த இம்ரான்கானின் அரசு, கடந்த ஆண்டு ஏப்ரலில் கவிழ்க்கப்பட்டது. பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) கட்சியின் தலைவர் ஷெபாஸ் ஷெரீஃப் பிரதமரானார். அதன் பிறகு இம்ரான் மீது பல்வேறு வழக்குகள் பாய்ந்தன. முன்பு எதிர்க்கட்சி வரிசையிலிருந்த ஷெபாஸுக்கு இம்ரான் அரசு என்னென்ன தொல்லைகள் கொடுத்ததோ அதே தொல்லைகளை இம்ரானுக்குக் கொடுத்தது ஷெபாஸ் அரசு. இரு அரசியல் தலைமைகளும் பொருளாதார நெருக்கடியிலிருக்கும் மக்களை மறந்து விட்டு வெளிப்ப டையாகவே மோதிக் கொண்டிருந்தனர்.

இந்தநிலையில்தான், அரசுப் பொறுப்பிலிருந்த போது பெற்ற பரிசுப் பொருட்களைக் கருவூலத்தில் ஒப்படைக்காத வழக்கில் இம்ரானுக்கு மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தது இஸ்லாமாபாத் நீதிமன்றம். இதனால் அவர் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குத் தேர்தலில் போட்டியிட முடியாது. அதைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு புதிதாகத் தேர்தல் நடத்துவதற்காக ஆட்சியைக் கலைத்திருக்கிறார் ஷெபாஸ் ஷெரீஃப். அதுவரை இடைக்காலப் பிரதமராக ஹபலுசிஸ்தான் அவாமி கட்சியின் தலைவர் அன்வர் உல்-ஹக் கக்கார் பொறுப்பேற்றிருக்கிறார்.

பாகிஸ்தான் அரசியல் சட்டப்படி இடைக்கால அரசு அமைக்கப்பட்ட 90 நாட்களுக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும். ஆனால் ஷெபாஸ் தரப்பினரோ, அடுத்த ஆண்டு தொடக்கத்தில்தான் தேர்தல் நடக்கும் என்கிறார்கள். இதற்கிடையே பாகிஸ்தான் பொதுநலன்கள் கவுன்சில் மக்கள் தொகை கணக்கெடுப்பைத் தொடங்க உத்தரவிட்டிருக்கிறது. மக்கள்தொகை கணக்கெடுப்பு நடந்தால் தொகுதிகளை மறுவரையறை செய்ய வேண்டியிருக்கும். அதற்கு நான்கு மாத காலமாகும் என்கிறார்கள் அங்கிருக்கும் தேர்தல் ஆணைய அதிகாரிகள்.

இதைக் கடுமையாக எதிர்க்கும் இம்ரான் ஆதரவாளர்கள், “ஆட்சி யைக் கலைக்கும் முன்பு, திட்டமிட்டே மக்கள் தொகை கணக் கெடுக்கும் பணியைத் தொடங்குவதற்கான கையெழுத்துகளை இட்டுச் சென்றிருக்கிறார் ஷெபாஸ்" என்று கொதிக்கின்றனர்.

பாகிஸ்தான் அரசியலை உற்றுநோக்குபவர்களோ, “உச்ச நீதிமன்றத்தில் இம்ரான் தரப்பு மேல்முறையீடும் செய்திருக்கிறது. தீர்ப்பு அவருக்குச் சாதகமாக வந்தால் இம்ரான் மீண்டும் பிரதமராக வாய்ப்பு அதிகம். மேலும், ஷெபாஸ் அரசு பொருளாதார நெருக்கடியைச் சரிவரக் கையாளவில்லை. ஆட்சியின் மீதான அதிருப்தியை மறைக்கவே இடைக்கால அரசைப் பொறுப்பேற்க வைத்திருக்கிறார். தன் அரசியல் கணக்குகளைச் சரிசெய்ய மக்கள் தொகை கணக்கெடுப்பின் மூலம் தேர்தலைத் தள்ளிவைக்க நினைக்கிறார் ஷெபாஸ்" என்கிறார்கள். மக்களின் தலைகளை எண்ணுபவர்கள் அவர்களின் நிலை குறித்தும் கொஞ்சம் சிந்தித்திருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழனாய்



தனித்துவம் கொண்ட
தமிழனாய்இருப்போம்
தடைகள் தகர்க்கும்
தமிழனாய் இருப்போம்
விழித்தெழும்
தமிழாய் இருப்போம்
எழுச்சிகொள்ளும்
தமிழாய் இருப்போம்
சூழ்ச்சி வெல்லும்
தமிழனாய் இருப்போம்
அறிவு புகட்டும்
தமிழனாய் இருப்போம்
அறியாமை போக்கும்
தமிழனாய் இருப்போம்
தட்டிப் பறிக்காத
தமிழனாய் இரப்போம்
தன்நலம் விரும்பாத
தமிழனாய் இருப்போம்
தலைமுறை காக்கும்
தமிழனாய் இருப்போம்
தமிழுக்கு தமிழாய் இருப்போம்
தமிழ்த்தாயின் மகனாய் வாழ்வோம்.

துரையரசன் வித்தியாபுரம், ஒட்டுசுட்டான்.

# குருந்தூர் மலையிலே...

ஆதிசிவன் ஐயனார்
அடியவர்களின் பக்தனார்
முல்லை மலை குருந்தூரிலே
மூத்த சிவன் ஐயனார்.

அடியவர்க்கு அருளவே
அருள் நிறைந்து மலையிலே
காலம் ஆயிரங்கள் கடந்துமே
காவல் காத்த ஐயனார்

கானகத்தின் சூழலில்
கவலையின்றி வணங்கவே
குடியிருந்து குருந்தூரிலே
குறைகள் தீர்த்த ஐயனார்

வீரம் செறிந்த உந்தனால்
விலகும்துன்பம் யாவுமே
தொன்மை நிறைந்த புகழினால்
தொல்லை கண்ட ஐயனார்

உந்தன் இடம் பறிக்கவே
உன்னருகில் கயமைகள்
எண்ணிமனம் வாடுது
எந்தனுயிர் நோகுது
உன்னருளைக் காட்டியே
உலகில் அருள் புரிந்திடு



பிரேமா தியா, யாழ்ப்பாணம்.

# சுயம் மறந்து

சுயமாக உற்பத்திகள் செய்து
சுகமாக வாழ்ந்து
வளர்ச்சிப் பாதையில் நடந்தோம்
தன்நிறைவுப் பொருளாதாரத்தில்
நாடு செழிக்குமென்றிருக்க
திறந்தபொருளாதாரமென்ற
மாயச்சந்தைக்கு வழியேற்படுத்தப்பட்டது.
இதை வாய்ப்பாக்கி
ஏகாதிபத்தியங்கள்
ஈழமணித் திருநாட்டை
தம்வசப்படுத்தின
ஏகாதிபத்திய அடிவருடிகளின்
அதிகார வெறியால்
எமது சுயத்தை
மெதுமெதுவாய் இழந்தோம்
அதனால் சீரழிவுக்குள்ளும்
அழிவுகளுக்குள்ளும்
உழல்கின்றோம்
நோய்களுக்கு ஆளானோம்.
இருந்தும்வல்லாதிக்கங்கள்
கைகொடுக்குமென்ற
வேணவாவினால்
டொலரென்ற மாயமானையே
எதிர்பார்த்துக் கிடக்கின்றோம்.



சி.இ.அன்புதுரை,
சம்மட்டிஒலை மானிப்பாய், சுழிபுரம்.

# மௌனத்தின் தேடல்- 683



# அதிகார வர்க்கம்

அதிகார மேடைதனிலே உட்கார்ந்து
அடக்குமுறை தனை கைகளில் ஏந்தி
அடிமைப்படுத்தி ஆட்சி எனும் பெயரினிலே
அப்பாவி ஜனங்களை அடக்கி ஆளும் அரக்கனே
பதவி எனும் மகுடம் கையில் இருக்கும் வரை உன் பவுசு
பதவி போனபின் தெரிந்திடுமே உன் மவுசு

ஆ. பாலமதுஜா,
யா/மெதடிஸ்த பெண்கள்
உயர்தர பாடசாலை.

# மௌனத்தின் தேடல்- 684



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

# உண்மை சுடும்

சுடும் துப்பாக்கி போன்று
சுட்டு விரல் நீண்டு
குற்றங்களைச் சுமத்தும் போது
பெரு விரலும் துணை போகும்
உண்மைகளை ஆராயுமாறு
பெரும் பாண்மை மிகுதி மூன்றும்
ஓசையின்றி பின்வாங்கும்
உரிமைகளில் கை வைப்பதும்
அதிகாரம் காரமாவதும்
அமைதியின்மைக்கே வழி வகுக்கும்

க.நாகராசா,
நுணாவில்

# முதலாளித்துவம்

முதலாளித்துவத்தின் சுண்டு
விரல் அசைவின் முன்
தொழிலாளித்துவத்தின் பலப்
பிரயோகம் எம்மாத்திரம்

சி. மகாலட்சுமி,
கொக்குவில்.

# ஆக்ரோஷம்

அகம்பாவமும் அடாவடித்தனமும்
உன்விரலில் உள்ள வரை
அதர்மம் வழர்ந்து தழைத்தோங்கும்
இரு கைகள் சேர்ந்தால் தான் ஒலி கேட்கும்
இரு கைகளும் சேர்ந்தும் உன் சுண்டுவிரலை
அசைக்க முடியவில்லையே

ஆ.செல்வி,
திருநாவலூர்.

# விரல்

தாயின் விரல் பிடித்து
குறுநடை பயின்று
தாரத்தின் விரல் பிடித்து
அக்கினி வலம் வந்து
இல்லற வாழ்க்கையில் உயர்ந்து
நிற்கும் மனிதா! தாழ்ந்தவர்
நிலையினை மீட்குமா! உன் விரல்

க.திருமகள்,
பண்டத்தரிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காலத்தின் பதிவு 74

# கடல்புறா

## நீர் மோகினி

அவள் அழகு அவன் அறிவைப் பறித்துக் கொண்டது. கடலிலிருந்து கிளம்பிய நீர்மோகினியொருத்தி இந்தத் தரணியின் தரையிடம் ஆசைப்பட்டு வருவது போல் நடந்து வந்தாள் மஞ்சளழகி. கீழ்ச்சிற்றாடை வரிந்து கட்டப்பட்டதாலும் மேலாடை நீரினால் உடலில் ஒட்டிக் கிடந்ததாலும் புலப்பட்ட அழகின் மனோகரத் தோற்றம் காந்தமென அவன் கண்களை இழுத்தது.

மஞ்சன் நிறத்தின் மீது கதிரவன் பாய்ச்சிய காலை நேரச் செங்கிரணங்கள் அந்த மஞ்சளுக்கு ஓரளவு சிவப்பையும் கொடுத்ததால் கண்ட இடத்தில் அவள் செம்பஞ்சுக் குழம்பை வாரித் தெளித்துக் கொண்டிருக்கிறாளோ என்ற பிரமையை அளித்தது. முகத்திலும் காலிலும் கைகளிலும் இருந்த நீர் முத்துகள் காலை வெய்யிலில் பளபளத்து உடலெங்கும் முந்திழைத்துக் கொண்ட மோகினியாக அவளைச் செய்து கொண்டிருந்தது.

இப்படிப் பற்பல ஊகங்களுடனும் கற்பனைகளுடனும் அவள் தன்னை நோக்கி வருவதைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த இளையபல்லவனின் மன உறுதி அந்தக் காலைக்காற்றில் பறந்து கொண்டிருந்தது. ஏதோ ஒரு தேவதை தன்னை நோக்கி வருவது போல் வந்து கொண்டிருந்த மஞ்சளழகியின் உடல்கட்டுகளின் தோற்றமும் நடை துலங்கிய எழில்களும் அவனைப் பெரும் சங்கடத்துக்குள்ளாக்கின.

ஆகவே அவள் தானிருக்குமிடத்துக்குச் சற்றுத் தூரத்தில் வரும் போதே இளையபல்லவன் சரேலென எழுந்து நீர்க்கரையிலிருந்து சற்றுப் பின்னடைந்து நின்றான். அவள் வெகு அருகில் வந்ததும் பிறந்த நாட்டின் பண்பாடுகள் உள்ளத்துக்கு அணை போடவே பார்வையை அவளை விட்டு நிலத்திலும் தாழ்த்தினான். ஏதேதோ யோசனையின் காரணமாக இளையபல்லவன் இருப்பதைப் பாராமலே அவனை நெருங்கி நீர்ப்புறத்திற்கு திரும்பி, தலை துவட்டிக் கொள்ள மேலாடையை நீக்கி, அது கீழே விழுந்ததன் விளைவாக இளையபல்லவனைப் பார்த்து விட்ட மஞ்சளழகியின் உடலில் நாணமும் திகிலும் பாய்ந்து சென்றன.

இளையபல்லவன் தன்னை அப்பொழுது பாராமல் தலையைத் திருப்பிக் கொண்டு துணியை எடுத்து நீட்டியதால் ஓரளவு அவன் பண்பாட்டைப் புரிந்து கொண்டாலும் மஞ்சளழகியின் மனத்தில் சங்கடம் பெரிதும் ஓங்கி நின்றது. சரேலென அவன் கை நீட்டித் துணியை பறித்தும் கொண்டு அலைகள் வந்து கொண்டிருந்த பெரும நீர்ப்பரப்பை நோக்கினாள்.

அந்த அலைகளை விடத் தன் இதய அலைகள் தன்னைத் தூக்கிப் பல திசைகளில் எறிவதை அவள் உணர்ந்தாள். அவன் தன்னை, தன் நடையை, நல் எழில்களைப் பெரிதும் பார்த்திருப்பான் என்று தீர்மானித்த மஞ்சளழகி, “யாருமிருக்க மாட்டார்கள் என்பதால் தானே இங்கு நீராட வந்தேன். இங்கும் அதுவும் போயும் போயும் இவர் வந்து சேர்ந்தாரே” என்று எண்ணினாள்.

“அவர் முகம் திரும்பித்தானிருக்கிறது. எண்ணங்கள் திரும்பியிருக்காதே. தூர வரும்போது கண்ணால் கண்டதையெல்லாம் திரும்பவும் கற்பனையில் காண்பாரே. இவர் ஊனக்கண்ணை விட உள்ளக்கண் பொல்லாததாயிற்றே” என்று சிந்தித்து சிந்தித்து இன்பமும் துன்பமும் கலந்து வாட்டத் தலை துவட்டினாள். அவள் இல்லை இல்லை. இளையபல்லவன் இதயத்தைத் துவட்டினாள். இதயத்தை இளையபல்லவன் இரும்பாகத்தான் செய்து கொண்டிருந்தான்.

ஆனாலும் இரும்பை உருக்கும் சக்தி அந்தக் கரும்புக்கு இருந்ததை உணர்ந்தான். அந்த நீர்மோகினி அவன் இதயத்தைப் பல மலர்க் கணைகளால் பிளந்தாள். தலை மீண்டும் கடற்புறத்தை நோக்கித் திரும்பியது. சற்று தூரத்தே இருந்து அந்த நாடகத்தை வேறு ஓர் உருவமும் கவனித்தது.

(தொடரும்...)

---

# நான் வைரமுத்து பேசுகிறேன்... 20

## வெளியூர்ப் பூக்கள்

ஹாம்லெட் உறைக்குள் ஒளிக்கப்பட்ட வாள்போல் உள்ளுக்குள் அழுகிறான்.

அவனது கண்ணீர் வெள்ளத்திலிருந்து கூட ஓர் ஏளனம் கரையேறி வருகிறது.

**“கருமாதிக்காக
அவிக்கப்பட்ட
புலால்
கல்யாண மேஜையில்
பரிமாறப்படுகிறதோ?”**

அடடே நாடகப் புலவனே! உன் மேடையில் ஆடிய திரை



களில் நானொரு நூலாகவேனும் இருந்திருக்கக் கூடாதா?

இன்னும் இப்படி உள் மனசுக்கு உடைந்து விழுந்திருக்கின்றன ஓராயிரம் மின்னல்கள்.

உடைந்து விழுந்த ஒவ்வொரு துண்டும் வெண்ணிலா வாய் முளைக்கும் வீரியம் கொண்டவை.

நம் ஊரில் கூட மறந்து போன மலர்கள் மகரந்தச் சேர்க்கை செய்ய ஆரம்பித்திருக்கின்றன.

மத்தியக் கல்விக் கழகம் மிக மிகத் தாமதமாய்ப் போதி மரத்தடிக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறது.

அண்மையில் மத்தியக் கல்வி அமைச்சர் திருமதி ஷீலா கௌல் தலைமையில் நிறைவேறியிருக்கும் திண்ணியத் தீர்மானங்கள், தாமரைப் பூவில் உறங்கிக் கொண்டிருக்கும் சரஸ்வதியின் முகத்தில் தண்ணீர் தெளிப்பதாக இருக்கின்றன.

அதில் ஒரு தீர்மானம் மூடிக் கிடக்கும் நம் நெற்றிக் கண்ணைக் குண்டூசியால் குத்துவது போல் இருந்தாலும் பல தீர்மானங்கள் வாராது போல் வந்த மாமழையாகவே மகிழ வைக்கின்றன.

ஆரம்பக் கல்வியில் பத்தாவது வகுப்புவரை யாரையும் ஃபெயில் ஆக்கிவிடக்கூடாது என்ற தீர்மானம் இந்த நாட்டின் பாமரஜாதிப் பையன்களுக்கெல்லாம் கிடைத்த பரிசாகும் என்றே கருதுகிறேன்.

ஏனென்றால் தேர்ச்சி பெறாத ஒரே காரணத்திற்காக இந்த நாட்டில் கருகிப்போன அரும்புகள் ஆயிரம் ஆயிரம்!

“பாஸானால் மேலே படி இல்லையென்றால் இருக்கவே இருக்கிறது எருமை மாடு” என்பதுதான் கிராமத்துத் தகப்பன்கள் தினம் தினம் சொல்லிக் கொண்டிருக்கும் திருக்குறள்.

ஒரு சரித்திரச் சம்பவம் ஞாபகத்திற்கு வருகிறது.

அலெக்ஸாண்டிரியாவைக் கைப்பற்றிய ஒரு முஸ்லிம் அரசன் அங்கிருந்த லட்சக்கணக்கான ஏடுகளைக் கொண்ட நூலகத்தை உடனே கொளுத்தி விட உத்தரவிட்டானாம்.

ஏனென்று கேட்ட போது அவன் சொன்னானாம்.

“இங்கிருக்கும் ஏடுகளெல்லாம் குர்ஆனுக்கு விரோதமான கருத்துக்களைப் பேசினால், அவை எதற்கு? கொளுத்தி விடுங்கள்.”

“ஒருவேளை இங்கிருக்கும் ஏடுகளெல்லாம் குர்ஆனின் கருத்துக்களைப் பேசினால், அவை எதற்கு? குர்ஆனே போதும். கொளுத்தி விடுங்கள்.”

கிராமத்துத் தகப்பன்கள் கூடப் பல நேரங்களில் அந்த அரசனைப் போலவே முடிவெடுக்கிறார்கள். “இனிமேல் நீ பாஸானாலும் படிக்க வேண்டாம். ஃபெய்லானாலும் படிக்க வேண்டாம்.”

இப்படி நிகழ்கால வறுமை வேறு. அவன் விரும்பிய கல்வியை வேட்டையாடி விடுகிறது. தேர்வில் ஒரு மாணவன் தோற்றுப் போவதென்பது அவன் மட்டுமே சம்பந்தப்பட்டதன்று.

அவன் மட்டுமே சம்பந்தப்படாத ஒரு பாவத்திற்கு அவன் மட்டுமே தண்டனை அனுபவிப்பது என்ன நியாயம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

362

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# வீட்டிற்கொரு ஜம்புமரம் நடுவோம்

எளிமையும் எண்ணற்ற சத்துக்களையும் கொண்டது ஜம்பு. இது வேர் முதல் இலை வரை பயன்படக்கூடியதும் மருத்துவ குணங்களைக் கொண்டதும் கோடை கால தாகத்தையும் பசியையும் தீர்க்கும் அருமருந்தும் ஆகும்.

ஜம்பு மரத்தினுடைய வரலாறு, பயன்கள் எப்படி நடுவது என்பவை பற்றிப் பார்ப்போம்.

**ஜம்பு மரத்தின் வரலாறு**

முதலில் ஜம்பு மரத்தின் பெயர்கள் பற்றி பார்ப்போம். தமிழிலே "ஜம்பு" என்றழைப்பது போல் ஆங்கிலத்தில் இதனை றோஸ் அப்பிள் (Rose apple), பெல் பழம் (Bell fruit), றோயல் அப்பிள் (Royal apple), வாக்ஸ் பழம் (Wax furit) என்றழைப்பார்கள்.

அதிலும் தாய்வான் நாட்டைச் சேர்ந்தவர்கள் கருஞ்சிவப்பு நிறமான ஜம்புப் பழத்தை (Black pearl) அதாவது கறுப்பு முத்து என்று அழைப்பார்கள்.

இதனுடைய தாவரவியல் விஞ்ஞானப் பெயர் Syzygium samarangense ஆகும்.

ஜம்பு மரம் இந்தியா, இந்தோனேஷியா நாடுகளினதும் அந்தமான், நிக்கோபார், மலேயா தீவுகளின் கடற்கரையோடு காடுகளினதும் சுதேச மரமாகும்.

அதன்பிறகு, வரலாற்றுக்கு முந்திய காலத்திலேயே பிலிப்பைன்ஸ் தீவுகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்பிறகு இலங்கை உட்பட தென்கிழக்காசிய நாடுகளில் அறிமுகப்படுத்தப்பட்டது.

அசோகச் சக்கரவர்த்தியின் மகன் "மகிந்த" என்ற மன்னன் ஜம்பு மரத்தை இந்தியாவில் இருந்து கொண்டு வந்து இலங்கை மன்னன் தேவநம்பியதீசனிடம் கொடுத்ததாக மகாவம்ச வரலாறு கூறுகிறது.

ஜம்புமரம் உயர் வெப்ப மண்டலத்தின் தாழ் நிலங்களில் மிகச் சிறப்பாக வளரக் கூடியது.

இலங்கையின் காலநிலையைப் பொறுத்தவரையில் இது மிகவும் சிறப்பாக வளரக்கூடியது. அதுவும் பங்குனி, சித்திரை, வைகாசி மாதங்கள் ஜம்பு மரம் கனிகளைத் தரக்கூடிய காலமாகும்.

ஒரு மரத்தில் இருந்து 700 வரையான கனிகளைப் பெற முடியும்.


ஒரு மரம் 15 அடி முதல் 50 அடி வரையும் வளரக் கூடியது.

முன்னைய காலங்களில் ஜம்பு பழங்களை உண்டு பார்த்த பின் இப்போது இந்த ஜம்பு மரத்துக்கும் எமது இந்து புராணக் கதைகளுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதை அறிய முடிகிறது.

விஷ்ணு புராணத்தில் இந்தப் பிரபஞ்சம், 7 தீவு கண்டங்களாகவும் அதனைச்சூழவுள்ள 7 சமுத்திரங்களாகவும் பிரிக்கப்பட்டது. ஒரு கண்டத்தில் ஜம்பு மரங்கள் செறிந்து காணப்பட்டதால் ஜம்புத் தீவு அதாவது ஜம்பு மரங்களின் நாடு என்று அழைக்கப்பட்டது என்று விஷ்ணு புராணத்தில் கூறப்படுகின்றது.

எம் எல்லோருக்கும் தெரிந்த அயல் நாடான இந்தியாவே முன்பு ஜம்புத்தீவு என்றழைக்கப்பட்டது.

விஷ்ணு புராணத்தின் இன்னுமொரு பகுதியில் இந்த ஜம்புப் பழங்கள் மிகவும் பெரியன. அதாவது யானையளவு பெரியன எனவும் மலையொன்றின் உச்சியிலே காணப்பட்ட ஜம்பு மரங்களில் இருந்து கீழே விழுந்து வெளிப்பட்ட பழச்சாறுகள் எல்லாம்



ஒன்று சேர்ந்து நதியாக ஓடியது எனவும் அதுவே ஜம்பு நதி எனவும் கூறப்படுகின்றது.

அதைவிட இன்று இந்தியாவின் திருச்சிராப்பள்ளியின் அருகிலுள்ள ஸ்ரீரங்கத்தில் ஜம்புகேஸ்வர கோயிலின் ஸ்தல புராணத்தில் இன்றும் கோயிலில் காணப்படுகின்ற ஜம்பு மரத்தின் கீழுள்ள சிவலிங்கம் பற்றி ஒரு கதை இருக்கின்றது.

சிவபெருமான் ஒருநாள் மரமொன்றின் கீழ் இருந்து தியானம் செய்து கொண்டிருக்கும் பொழுது அருகில் உள்ள மரமொன்றிலிருந்து பழம் ஒன்று இவர் அருகில் விழுந்தது. சிவபெருமான் அந்தப் பழத்தை எடுத்து உண்டுவிட்டு அதனுடையவித்தை வெளியே துப்பினார். அந்த வித்திலிருந்து முளைத்த மரமே ஜம்பு மரமாகவும் சிவபெருமானே சிவலிங்கமாகவும் அவ்விடத்தில் இன்றும் வழிபடப்படுகின்றது.

இராமாயணத்தில் இராமர் 14 ஆண்டு கால வனவாசத்தின் போது காட்டிலுள்ள இந்த ஜம்புப் பழங்களை உண்டார் எனவும் இராமாயணக் கதை கூறுகின்றது.

இந்த ஜம்பு மரம் பெரிய மரக் கொப்புகளைக் கொண்டதும் பெரிய நிழல் தரக்கூடிய குளிர்ச்சியான மரம் என்பதால் பல ஞானிகள், யோகிகள் இந்த மரத்தின் கீழே அமர்ந்து தியானம் செய்தார்கள் என பல கதைகள் உண்டு.

**பழம்**

உணவாகப் பயன்படுகின்றது. நீர்த்தன்மை கூடிய பழம். உடலின் குளிர்மையைப் பேணுகிறது. பழத்தில் பழச்சாறு செய்து பருகலாம். ஒரு சலரோக நோயாளியைப் பார்த்து ஒரு துண்டு மாம்பழம் உண்ணுங்கள் என்போம். ஒரு துண்டு சுவைத்த வரால் மீதியைவிட்டு வைக்க மனம் வராது. இவ்வாறு உண்டு சலரோகம் கட்டுப்பாடு இழந்து வைத்தியசாலையே வாசம் என இருப்போர் மத்தியில் ஜம்புப்பழத்தின் அறிமுகமானது ஒரு கொடை, இந்தப்பழத்தை விரும்பிய அளவு உண்ணலாம்கெடுதல் இல்லை.

ஜம்புப்பழம் இலை, பூ, விதைகள், வேர், பட்டை என்பவற்றில் மருத்துவத் தன்மைகள் இருப்பதாக ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளன. சில ஆய்வுகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

ஜம்புப்பழம் விற்றமின் "சி" கூடிய உணவாகவும் நார்த்தன்மை கூடிய உணவாகவும் காணப்படுகின்றது. நார்த்தன்மை காரணமாக உடலின் கொழுப்புத் தன்மை அதாவது Cholesterol குறைவடைவதாக ஆய்வுகளிலிருந்து அறியப்படுகின்றது. சதையின் தொழிற்பாடு குறைவடைவதால் ஏற்படும் சலரோக நோயாளிகளில் மாச்சத்து வெல்லமாக மாறுவதைக் கட்டுப்படுத்துகிறது.

ஜம்புப்பழ வித்தில் Jumboline என்ற இரசாயனப் பதார்த்தம் காணப்படுகின்றது. இது சலத்தில் வெளியேறும் வெல்லத்தின் அளவைக் குறைப்பதாக ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது. ஜம்புப்பழம் மறைமுகமாக மார்பகப் புற்று நோய் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறைக் குறைப்பதாக ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. ஜம்புப்பழச் சாறு மூளை, ஈரல்களுக்கு நன்மையளிப்பதாகவும் ஜம்புப் பூவிலிருந்து பெறப்படும் சாறு காய்ச்சலைக் குறைப்பதாகவும் இலைகளிலிருந்து பெறப்படும் சாறு இருமல், மூட்டு வாதத்துக்கு பயன்படுவதாயும் சிறுநீரின் அளவை அதிகரிக்கும் (Diuretic) தன்மையைக் கொண்டிருப்பதாயும் ஆய்வுகள் கூறுகின்றன. ஜம்புப்பழ விதைகளில் உணர் வழியில் தன்மை இருப்பதாகவும் வேரில் வலிப்பு நோயைக் குறைக்கும் தன்மை காணப்படுவதாகவும் நம்பப்படுகின்றது. மருத்துவம் தவிர விதைகள் நீக்கப்பட்ட பழத்திலிருந்து - பன்னீர், இலைச் சாற்றிலிருந்து வாசனைத்திரவியம் (perfume) மற்றும் மரத்திலிருந்து வயலின், கிற்றார், போன்ற இசைக்கருவிகளும் உருவாக்கப்படுகின்றன.

**நடுவது எப்படி?**

கீழ்வருவனவற்றைக் கருத்தில் கொண்டு நட வேண்டும்.

2 X 2 X 2 அடி நீளம், அகலம், ஆழம் கொண்ட குழி வெட்டவும். மரக்கன்றுகளை இயற்கை உரம் கொண்டு மூடவும்.

முதற்கிழமை ஒவ்வொரு நாளும் நீர் ஊற்றவும்.

இரண்டாவது கிழமை இரண்டு நாட்களுக்கு ஒரு முறை நீர் ஊற்றவும்.

மூன்றாவது கிழமை மூன்று நாட்களுக்கு ஒரு முறை நீருற்றவும்.

மூன்று மாதங்கள் கடந்த பின் கீழ்ப்பகுதியில் உள்ள பக்க கிளைகளை கத்தரித்து விடுவதன் மூலம் நேராக வளர்க்க முடியும்.


சிறிய நிலப்பரப்புகள் உள்ள வீடுகளிலும் வளர்க்க முடியும். வருடத்துக்கு இரு தடவைகள் பழங்களைத் தரக்கூடியது. வலை கொண்டு மரத்தை மூடுவதன் மூலமும் பைகள் கொண்டு பழங்களை மறைப்பதன் மூலமும் பறவைகளின் தாக்கத்திலிருந்து பாதுகாக்கலாம்.

வீட்டிற்கொரு ஜம்புமரம் நடுவோம் பயன் பெறுவோம்

**Dr. சி.சிவன்சுதன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இலங்கை-தாய்லாந்து" உறவை வலுப்படுத்தும் கலந்துரையாடல்



(கொழும்பு)

இலங்கைக்கும் தாய்லாந்துக்கும் இடையிலான ஐந்தாவது சுற்று இருதரப்பு அரசியல் ஆலோசனைகள் நாளை 28 ஆம் திகதி கொழும்பில் உள்ள வெளிவிவகார அமைச்சில் நடைபெறவுள்ளது.

இந்த ஆலோசனையில்வெளிவிவகார செயலாளர் அருணி விஜேவர்தன மற்றும் தாய்லாந்தின் வெளிவிவகாரங்களுக்கான நிரந்தர செயலாளர் சருண் சரோன்சுவான் ஆகியோர் ஈடுபடவுள்ளனர்.

அரசியல், வர்த்தகம், முதலீடு, பாதுகாப்பு, கலாசாரம் மற்றும் சுற்றுலா உட்பட பரஸ்பரம் உறவுகள் மற்றும் தற்போதைய ஒத்துழைப்பை உள்ளடக்கிய இரு தரப்பு உறவுகளின் நிலை ஆகியன இந்த ஆலோசனைகளின் போது மதிப்பாய்வு செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

2024 ஆம் ஆண்டில் முதல் காலாண்டில் இலங்கை-தாய்லாந்து சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை அமுல்படுத்த கடந்த ஆலோசனை கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4)


## மணமகன் தேவை

யாழ்.கத்தோலிக்க (R.C) மதத்தைச் சேர்ந்த 1989 ஆம் ஆண்டு பிறந்த அரச தொழில் புரியும் மணமகளுக்கு மணமகன் தேவை. யாழில் வசிப்பவர் விரும்பத்தக்கது. கிரகபாவம் 19 3/4. விருச்சிக இராசி. நட்சத்திரம் அனுசம்.

2023.08.27

**077 008 3491** (16853)



## மணமகள் தேவை

யாழ்.கத்தோலிக்க (R.C) மதத்தைச் சேர்ந்த தனியார் துறையில் பணியாற்றும் 1986 ஆம் ஆண்டு பிறந்த மிதுன இராசி, திருவாதிரை நட்சத்திரம், 76 பாவமுடைய, கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு மணமகள் தேவை. 2023.08.27

**077 967 2613** (16853)


# வறட்சியான காலநிலையால் நாட்டில் 6,000 ஹெக்ரேயர் காடுகள் தீக்கிரை

## தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் வறட்சியான காலநிலை காரணமாக சுமார் ஆறாயிரம் ஹெக்ரேயர் காடுகள் தீக்கிரையாகியுள்ளதாக தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

வறட்சி காரணமாக 53 774 ஏக்கர் வயல் நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் 48726 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, காடுகளுக்கு தீ மூட்டுதல் மற்றும் விலங்கு வேட்டையாடுதல்போன்ற செயற்பாடுகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என வனவிலங்கு பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி தெரிவித்துள்ளார்.

மேலும்காடுகளுக்குதீவைப்பதனை தடுக்கும் நோக்கில் மக்களை தெளிவூட்டக்கூடிய வகையிலான நடவடிக்கைகள் அடங்கிய அமைச்சரவை பத்திரமொன்று முன்வைக்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (4)

# எக்பிரஸ் பேர்ள் கப்பல் இழப்பீடு; வழக்கை மாற்றுவதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

எக்பிரஸ் பேர்ள் கப்பல் இழப்பீடு தொடர்பான வழக்கை சிங்கப்பூர் வர்த்தக மேல் நீதிமன்றத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எக்பிரஸ் பேர்ள் கப்பல் வழக்கை சிங்கப்பூர் நீதிமன்றத்திற்கு கொண்டு சென்றதன் பின்னர் குறித்த காப்புறுதி நிறுவனம் கோரிக்கை ஒன்றை முன்வைத்தது.

அதாவது தொடுக்கப்பட்டுள்ள வழக்குக்கு எந்த பாதிப்பும் ஏற்படாத வகையில் இந்த விடயம் தொடர்பான கலந்துரையாடலில் ஈடுபடலாம்.

இதற்காக 9 பேர் கொண்ட குழுவினை நியமித்தோம்.

குறித்த ஒன்பது பேரும் கடந்த மாதம் சிங்கப்பூருக்கு சென்று இரண்டு கலந்துரையாடல்களில் ஈடுப்பட்டனர்.

கலந்துரையாடலின் பின்னர் சுமார் 8 இலட்சத்து 50 ஆயிரம் மில்லியன் டொலர் நிதியையும் மற்றுமொரு நிதித்தொகையை ரூபாவிலும் செலுத்துவதற்கு அவர்கள் விருப்பத்தை தெரிவித்திருந்தனர்.

இதன் பின்னர் இந்த வழக்கை வர்த்தக மேல் நீதிமன்றத்திற்கு மாற்றுவதற்கு யோசனை முன் வைக்கப்பட்டது அது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

அதற்கமைவாக இந்த வழக்கை வர்த்தக நீதிமன்றத்திற்கு மாற்றுவதற்கு உத்தேசித்துள்ளோம். ஆனால் அதிலும் தீர்வு கிடைக்கும் என்று நாங்கள் நம்பவில்லை" என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(4)




## சென்.ஜோண்ஸ் கல்லூரி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
## தரம் 6 இற்கான மாணவர் அனுமதி 2024

1. அ. விண்ணப்பப்படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளிலிருந்து 01.09.2023 முதல் பெற்றுக் கொள்ளலாம்.

   ஆ. எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

   இ. விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 20.09. 2023. அத்திகதிக்கு பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
2. விண்ணப்பப்படிவத்தினை அலுவலக நாட்களில் காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை அந்தந்தக் கல்லூரிகளில் பெற்றுக் கொள்ளலாம்.
3. விண்ணப்பப்படிவத்துடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (Photocopy) இணைக்கப்பட வேண்டும்.
4. சமாதான நீதவான் ஒருவரால் அல்லது தற்போது கல்வி கற்கும் பாடசாலை அதிபரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட கடவுச்சீட்டுக்குரிய அளவிலான (2 அங்குலம் X 2 அங்குலம்) புகைப்படம் ஒன்றும் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்பட வேண்டும்.
5. ஒரு படிவத்திற்கானதும் பரீட்சைக்கானதுமான கட்டணம் ரூபா 2000.00
6. **வயதெல்லைகள்:** தரம் 6 விண்ணப்பதாரி 01.02.2013க்கும் 31.01.2014க்குமிடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
7. தமிழ் அல்லது இருமொழி மூல கற்கைநெறி அனுமதிக்கான விண்ணப்பங்கள் மேற்கொள்ளப்படலாம்.
8. தரம் 06 இற்கான பிரவேசப் பரீட்சை 21.10.2023 சனிக்கிழமை காலை 08.00 மணிக்கு ஆரம்பமாகும்.

**குறிப்பு:**

- தகுதியுடையவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் தரம் 5 புலமைப் பரிசில் நிதி, தனியார் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் அரசாங்கத்தால் தொடர்ந்தும் வழங்கப்படுகிறது.
- சென்.ஜோண்ஸ் கல்லூரியில் தரம் 6 இற்கு அனுமதிக்கப்படும் மாணவர்களில் தகுதியான மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வாய்ப்புகள் வழங்கப்படும்.

(ளி-7135) **அதிபர்கள்.**



## வேலையாள் தேவை

யாழ்.நல்லூர் அருகாமையில் உள்ள தேநீர் சாலை ஒன்றிற்கு தேநீர் (Tea Maker)தயாரிப்பவர் தேவை.

தொடர்புகளுக்கு

**076 404 0326** (ளி-7141)



## தேவை

இலங்கையின் தொலைத்தொடர்பு சேவையில் முன்னணிநிறுவனமான டயலொக் கம்பனிக்கு முன் அனுபவமுள்ள விற்பனைப் பிரதிநிதிகள், கணக்காளர்கள் தேவை.

நேரில் வரவும்

**303, கே.கே.எஸ் வீதி (மிட்டாஸ் கடை சந்தி), யாழ்ப்பாணம்.**

27.08.2023 (ளி-7140)



## விற்பனைப் பிரதிநிதி வேலைவாய்ப்பு

பிரசித்தி பெற்ற பிளாஸ்டிக் நிறுவனமொன்றுக்கு விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

**கவர்ச்சிகரமான சம்பளம் மற்றும் மேலதிகக் கொடுப்பனவு.**

அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மட்டக்களப்பு பிரதேசத்தைச் சார்ந்தவர்கள், மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம் உடையவர்கள்.


நேர்முகத் தேர்வு: 31.08.2023
01.09.2023

**074 0125 902** (ஜ2101)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரயிலில் திடீர் தீ விபத்து; 9 பேர் உயிரிழப்பு!

## மதுரையில் சோகம்



(டில்லி)

மதுரை ரயில் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரயிலில் திடீர் தீ விபத்து ஏற்பட்டு 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

மதுரை - போடி ரயில் தடத்தில் ஐ.ஆர்.சி.டி.சி, சுற்றுலா ரயில் நேற்று முன்தினம் இரவு நிறுத்தப்பட்டிருந்தது. நேற்றுக் காலை 5.30 மணியளவில் இந்த சுற்றுலா ரயிலின் சமையல் கோஸில் இருந்த சிலிண்டர் வெடித்து சமையல் கோஸ் தீப்பற்றியதாக முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்குச் சென்ற தீயணைப்பு வீரர்கள் போராடி தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், ரயிலில் பயணம் செய்த 90 பேரில் 80 பேருக்கும் மேற்பட்டோர் தப்பி ஓடியுள்ளனர். மேலும், ரயிலில் ஏற்பட்ட தீ விபத்தில் 9 பேர் பலியாகியுள்ளனர். அத்துடன் எரிந்த நிலையில் அவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் மேலும் சிலர் சிக்கியுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. (4)

# அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கு விவேக் ராமசாமிக்கு பெரும் ஆதரவு

(வோஷிங்டன்)

**அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளராகக் களமிறங்கியுள்ள இந்திய வம்சாவளியைச் சேர்ந்த விவேக் ராமசாமிக்கு தேர்தல் பிரசாரத்தில் பெரும் ஆதரவு கிடைத்துள்ளது.**



2024 இல் நடைபெறவிருக்கும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்காக அந்நாட்டின் இரு பெரும் கட்சிகளான குடியரசுக் கட்சியும் ஜனநாயகக் கட்சியும் தயாராகி வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக கிராண்ட் ஓல்ட் பார்ட்டி என அழைக்கப்படும் குடியரசு கட்சியின் வேட்பாளராக யாரை அறிவிப்பது என அக்கட்சியில் தீவிர பரிசீலனை நடந்து வருகிறது. ட்ரம்ப் ஆதரவாளர்களான புளோரிடா கவர்னர் ரான் டிசான்டிஸ், தொழிலதிபரும் இந்திய வம்சாவளியை சேர்ந்தவருமான விவேக் ராமசாமி, முன்னாள் அமெரிக்க தூதர் நிக்கி ஹேலி, முன்னாள் அமெரிக்க துணை அதிபர் மைக் பென்ஸ், வட டகோடா மாநில கவர்னர் டக்ளஸ் பர்கம், செனட்டர் டிம் ஸ்காட் மற்றும் நியூ ஜெர்ஸி கவர்னர் க்ரிஸ் க்ரிஸ்டீ ஆகியோருடன் ட்ரம்பை எதிர்க்கும் அர்கன்ஸாஸ் மாநில முன்னாள் கவர்னர் அஸா ஹட்சின்ஸன் உட்பட பல வேட்பாளர்கள் குடியரசு கட்சியில் களத்தில் உள்ளனர்.

குடியரசு கட்சியின் வேட்பாளர்களை மட்டும் உள்ளடக்கிய ஒரு விவாத நிகழ்ச்சி, ஒரு தனியார் செய்தி தொலைக்காட்சியால் அமெரிக்காவின் விஸ்கான்ஸின் மாநிலத்தில் உள்ள மில்வாக்கி பகுதியில் நடத்தப்பட்டது.

இந்த விவாத நிகழ்ச்சிக்கு பின்னர் விவேக் ராமசாமியின் சிந்தனைகளும் செயற்றிட்டங்களும் பேசுபொருளானது.

அங்குள்ள பல ஊடகங்கள் அவரை பாராட்டி வரும் நிலையில், கூகுள் தேடலில் அதிகம் தேடப்பட்ட நபராகவும் விவேக் ராமசாமி இருந்தார். விவேக்கிற்கு மக்கள் ஆதரவு பெருகி வருவதை குறிக்கும் விதமாக கட்சிக்கான நிதியளிப்பில் ஏராளமானோர் முன்வந்து நன்கொடையளித்து வருகின்றனர்.

நிகழ்ச்சி முடிந்த சுமார் ஒரு மணி நேரத்திலேயே விவேக் ராமசாமியின் பிரசாரத்திற்கு ஆதரவாக சுமார் ரூ.4 கோடி ரூபாய் ($450000) நன்கொடை கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. (4)

# போர் பதற்றத்திற்கு மத்தியில் தாய்வானுக்குள் அத்துமீறிய 20 சீன விமானங்கள்

(பீஜிங்)

சீனா- தாய்வான் இடையே போர் பதற்றம் அதிகரித்துவரும் நிலையில் நேற்று தாய்வானுக்குள் சீனா 20 போர் விமானங்களை அனுப்பியுள்ளது.

தாய்வானை தங்களது நாட்டின் ஒரு பகுதி என்று சீனா சொந்தம் கொண்டாடி வருகிறது. இதற்கு தாய்வான் கடும் எதிர்ப்பு தெரிவிக்கிறது.

இவ் விவகாரத்தில் தாய்வானுக்கு அமெரிக்கா ஆதரவாக உள்ளது. இதற்கிடையே சமீபத்தில் தாய்வானை சுற்றி சீனா போர் பயிற்சியை நடத்தியது.

இந்நிலையில் தாய்வானின் வான் எல்லைக்குள் சீனப் போர் விமானங்கள் அத்துமீறி நுழைந்ததாக தாய்வான் நேற்று தெரிவித்தது.

கடந்த 24 மணி நேரத்தில் 20 சீன விமானப்படை விமானங்கள் தாய்வானின் வான் பாதுகாப்பு மண்டலத்திற்குள் நுழைந்தது என்றும் இதில் டிரோன்களும் அடங்கும் என்றும் தாய்வான் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. (4)

# நெரிசலில் சிக்கி 12 பேர் பலி!

(அன்டனானரிவோ)

விளையாட்டுப் போட்டியைக் காணச் சென்ற பார்வையாளர்களால் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 12 பேர் உயிரிழந்துள்ளனர்.

மடகஸ்கார் நாட்டின் தலைநகர் அன்டனானரிவோவில் ஓர் மைதானம் அமைந்துள்ளது. அங்கு நேற்று முன்தினம் விளையாட்டுப் போட்டி ஒன்றின் தொடக்க விழா நடைபெற்றது. இதைக் காண சுமார் 50,000 பார்வையாளர்கள் திரண்டிருந்தனர். அப்போது, மைதானத்தில் திடீரென ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 12 பேர் உயிரிழந்தனர் என்றும் 80 பேர் வரை காயமடைந்துள்ளனர் என்றும் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கலாம் எனவும் அந்நாட்டு பிரதமர் கிறிஸ்டியன் என்டசே தெரிவித்துள்ளார். (4)

# செப்.2 இல் சூரியனை ஆராய புறப்படும் ஆதித்யா

## இஸ்ரோ அதிரடி



(டில்லி)

நிலவின் தென்துருவ பகுதியை ஆய்வு செய்வதற்காக சந்திரயான்-3 விண்கலம் வெற்றிகரமாக நிலவின் மேற்பரப்பில் தரையிறங்கியது. இதையடுத்து, விக்ரம் லேண்டரில் இருந்து வெளிவந்த பிரக்யான் ரோவர் அதன் ஆராய்ச்சி பணிகளை தொடங்கி உள்ளது. 14 நாட்களுக்கான ஆய்வு பணியை இஸ்ரோ ரோவருக்கு வழங்கி உள்ளது. அதன்படி, ரோவர் நிலவின் மண்ணில் நகர்ந்து ஆய்வு செய்து வருகிறது.

இந்நிலையில் செப்டெம்பர் முதல் வாரத்தில் ஆதித்யா விண்கலத்தை விண்ணில் செலுத்த இருப்பதாக இஸ்ரோ அறிவித்திருந்த நிலையில் தற்போது திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரோ வெளியிட்டுள்ள அறிவிப்பில், செப்டெம்பர் 2 ஆம் திகதி ஆதித்யா எல்-1 விண்கலம் விண்ணில் பாய உள்ளது. சூரியன் தொடர்பான ஆராய்ச்சிக்காக ஆதித்யா எல்-1 விண்கலம் பிஎஸ்எல்வி-சி57 ரொக்கெட் மூலமாக விண்ணில் செலுத்தப்பட உள்ளது எனத் தெரிவித்துள்ளது. (4)

# தேசிய விண்வெளி நாளாக ஒகஸ்ட் 23 ஆம் திகதி

## பிரதமர் மோடி அறிவிப்பு

(டில்லி)

சந்திரயான் -3 நிலவில் தரையிறங்கிய ஒகஸ்ட் 23 ஆம் திகதியை தேசிய விண்வெளி நாளாக கொண்டாடப்படும் என இந்திய பிரதமர் மோடி நேற்று தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், நிலவில் யாரும் செய்யாத சாதனையை நாம் அனைவரும் போராடி படைத்திருக்கிறோம்.

நம் இந்திய மணித்திருநாட்டின் கௌரவத்தை நிலவில் நிரூபித்து இருக்கிறோம். 2019 இல் சந்திரயன் -2 நிலவில் தனது இடத்தை பதித்த இடம் திரங்கா (மூவர்ணக்கொடி) என அழைக்கப்படும். எந்த தோல்வியும் இறுதியானது அல்ல என்பதை நமக்கு நினைவூட்டவே திரங்கா என பெயர் சூட்டப்படுகிறது.



நிலவில் சந்திரயான்-3 தடம் பதித்த ஒகஸ்ட் 23ஆம் திகதியை இந்தியாவின் தேசிய விண்வெளி தினமாக கொண்டாடுவோம்.

இந்த நாளில் விஞ்ஞானம், அறிவியல், விண்வெளி ஆராய்ச்சி ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். நிலவில் பிரக்யான் ரோவரின் வீரத்தைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறேன் எனத் தெரிவித்தார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல சேவை செய்வதற்கு உரிய ஆற்றலை கெட்ட மனிதர்களிடம் ஒருநாளும் காண முடியாது

– பார்க்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தேவையில்லாத வேலையைச் செய்தால் தேவையான வேலையை செய்ய முடியாது

அரச திணைக்களங்கள், கூட்டுஸ்தாபனங்கள் மற்றும் சபைகளின் நிர்வாகம் என்பது தாபன விதிகளுக்கு அமைவாக நடத்தப்படுவது.

அதாவது தாபன விதிமுறைகள் மற்றும் நிதிப் பிரமாணங்கள் என்பவற்றின் அடிப்படையில் நிர்வாக ஒழுங்குமுறைகள் அமுலாக்கப்படுவதனால், எங்கும் ஒரே மாதிரியான கட்டமைப்புகள் நடைமுறையில் இருக்கும்.

ஆனாலும் குறித்த திணைக்களங்களின் தலைவர்கள் பொருத்தமான இடங்களில் சுற்றுநிருபங்களைத் தாண்டி தற்துணிவான தீர்மானங்களை எடுக்கின்ற நிலைமைகளும் உண்டு.

யாதாயினும் அதற்கான நியாயப்பாடுகளை முன்வைக்கின்ற ஆளுமையை குறித்த திணைக்களத் தலைவர் கொண்டிருக்க வேண்டும்.

இவை ஒருபுறமிருக்க, சில திணைக்களத் தலைவர்கள் நூறு வீதம் சுற்றுநிருபங்களை கட்டியணைத்து அதன்படியே தாங்கள் கருமம் ஆற்றுவோம் என உறுதிபட இருப்பர்.

இத்தகையவர்களிடம் மனிதநேயம் இருக்கும் என எதிர்பார்ப்பது முடியாத காரியம்.

அதேநேரம் இத்தகையவர்கள் தமக்குக் கீழ் பணியாற்றுகின்றவர்களிடம் இருந்து வினைத்திறனுடைய சேவையைப் பெற முடியாதவர்களாக இருப்பர்.

இன்னும் சிலர் ஏலவே பதவிகளில் இருந்தவர்கள் எதுவும் செய்யவில்லை என்பதுபோலவும் தாமே எல்லாவற்றையும் வெட்டி விழுத்துவது போலவும் தொடங்கி ஈற்றில் இருந்ததையும் கந்தறுத்து தாமும் நன்மதிப்பிழப்பர்.

இவ்வாறாக ஆளிடை வேறுபாடுகள் சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் பணிநிலைகளில் கடுமையான தாக்கம் செலுத்துகின்றன.

குறிப்பாக மாகாணத் திணைக்களத்தின் கீழ் வரக்கூடிய பிரதேச ரீதியான உப திணைக்களங்கள் அதிகாரமளிக்கப்பட்டவர்களின் மனநிலைக்குட்பட்டவாறு புதிது புதிதான நடைமுறைகள் ஆவணங்கள் பதிவுகள் என்பன நடைமுறைக்குட்படுத்தப்படுகின்றன.

இவ்வாறு ஓர் உப திணைக்களம் புதிய நடைமுறைகள், ஆவணங்கள் பதிவுகள் என்பவற்றை அமுலாக்கும்போது அங்கு விமர்சனங்களும் ஒப்பிடுகைகளும் எழுகின்றன.

அதாவது சமாந்தரமான உப திணைக்களங்களில் பணியாற்றுகின்றவர்கள் மேற்குறித்த நடைமுறைகள் தொடர்பில் வாதப் பிரதி வாதங்களில் ஈடுபடுவர்.

இஃது ஒரு குழப்பமான சூழ்நிலையை நிர்வாகத்தில் ஏற்படுத்தும்:

அதேபோன்று சில திணைக்களங்கள் ஏனைய திணைக்கங்களின் பொருத்தப்பாடற்ற கோரிக்கைகளை, அறிவுறுத்தல்களை நிராகரிக்க முடியாதவர்களாக இருக்கின்றன. இங்குதான் தேவையில்லாத வேலை தொடங்குகிறது.

இவ்வாறு தேவையில்லாத வேலையைச் செய்யும்போது தேவையுள்ள வேலையைச் செய்ய முடியாமல் போகிறது. இதனால் குறித்த திணைக்களங்களின் இலக்கு இடர்படுகிறது.

ஆகையால் மாகாணத்தின் நிர்வாகத்துக்குப் பொறுப்பானவர்கள் தமது அதிகார எல்லைக்குட்பட்ட நிறுவனங்கள் தமக்குரித்தான பணியைச் செய்வதற்குத் தடையாக இருக்கக்கூடிய ஏதுக்களை இல்லாது செய்ய வேண்டும். அப்போதுதான் பொறுப்பளிக்கப்பட்ட பணி செம்மையாக நடந்தேறும்.

# முல்லையில் மனிதர்களுக்கும் காணி இல்லை கால்நடைகளுக்கும் மேய்ச்சல் தரை இல்லை

## முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் ரவிகரன்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில்வனவளத்திணைக்களத்தின் ஆளுகையிலேயே மிக அதிகளவிலான நிலப்பரப்பு காணப்படுவதாக முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 3389 குடும்பங்கள் குடியிருக்க காணிஇல்லாத நிலையில் வாழ்வதாகவும், 89 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு மேய்ச்சல் தரை இல்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் வாழும் 3389 குடும்பங்களுக்கு குடியிருப்பதற்கு நிலம் இல்லை. தொழில் முயற்சிக்கென 28,626 இளைஞர், யுவதிகள் ஒரு ஏக்கர் வீதம் தமக்குக் காணி தருமாறு மாவட்ட செயலகத்திடம் கோரிக்கை முன்வைத் துள்ள போதிலும் அதற்கு சாதகமான பதில்கள் இல்லை.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் 2022ஆம் ஆண்டுக்கான புள்ளிவிபரத்தின் அடிப்படையில், முல்லைத்தீவு மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பானது 2415 சதுர கிலோ மீற்றர் தரையாகவும், 202 சதுர கிலோ மீற்றர் உள்ளக நீர்ப் பிரதேசமாகவும் காணப்படுகிறது. இதில் கடந்த 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் 222006 ஏக்கர், 36.72 சதவீதமான நிலம் வனவள திணைக்களத்தின் ஆளுகைக்குட்பட்டு காணப்பட்டது.

இந்நிலையில் கடந்த 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் 167484 ஏக்கர் 30.37 நிலப்பரப்பை வனவள திணைக்களம் மேலதிகமாக தனது ஆளுகையின் கீழ் கொண்டுவந்துள்ளது.

தற்போது காடு பேணல் சட்டத்தின் கீழ் ஒதுக்கக் காடுகளாக மீண்டும் 42, 631 ஏக்கர் 7.15 சதவீதமான நிலப்பரப்பை வனவள திணைக்களம் கோரியுள்ளது. அவ்வாறு குறித்த நிலப்பரப்பும் வனவள திணைக்களத்தினால் உள்வாங்கப்பட்டால் மொத்தமாக உள்ள முல்லைத்தீவு மாவட்டத்தின் நிலப்பரப்பில் 74.24 சதவீதபான நிலப்பரப்பு வனவள திணைக்களத்தின் ஆளுகைக்குள் உள்வாங்கப்பட்டுவிடும்.

மிகுதி நிலப்பரப்பில் பெரும்பகுதியை மகாவலி அபிவிருத்தி அதிகார சபை, தொல்லியல் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், கனிய மணல் திணைக்களம், படையினர் உள்ளிட்ட தரப்பினர் ஆளுகை செய்கின்றனர். குறிப்பாக வனவள திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நிலப்பரப்பில், மாவட்டத்தின் அபிவிருத்தி தேவைக்காக சுமார் 50,000 ஏக்கர் காணி தேவை எனவும், அவற்றை விடுவித்து தருமாறு மாவட்ட செயலகம் கோரிக்கை விடுத்துள்ள போதிலும் முறையான பதில்கள் இதுவரையில் கிடைக்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால்வேறு திணைக்களங்கள் காணிக் கோரிக்கை முன்வைக்கும்போதும் ,குடியேற்றங்களுக்காக காணிக் கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்ற போதும் காணிகளை விடுவிக்கின்ற நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான சந்தர்ப்பத்தில்முல்லைத்தீவு மாவட்டத்தில் 3389 குடும்பங்களுக்கு இதுவரை குடியிருக்க காணிஇல்லாத நிலை காணப்படுகிறது.

இதுதவிர முல்லைத்தீவு மாவட்டத்தில் 89 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கால்நடைகள்உள்ள நிலையில், கால்நடைகளுக்குரிய மேய்ச்சல் தரைகளும் இதுவரையில் வழங்கப்படவில்லை. நீண்ட காலமாக இவ்வாறு மேய்ச்சல் தரைக்கான கோரிக்கை முன்வைக்கப்படுகின்ற போதிலும்இதுவரை மேய்ச்சல் தரைக்குரிய காணிகள் வழங்கப்படவில்லை.

அந்த வகையில், தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழ் மக்கள் குடியிருக்க காணி இல்லாததோடு, கால்நடைகளுக்கும் மேய்ச்சல் தரைக்கான காணிகள் இல்லை என்கிற நிலைமையே ஏற்பட்டுள்ளது என்றார். (ம-7)

# பாதீட்டை மீளாய்வு செய்யும் பணிகள் ஆரம்பம்

(கொழும்பு)

அடுத்த வருட பாதீட்டுக்கான முன்மொழிவு களை மீளாய்வு செய்யும் பணிகள் எதிர்வரும் 28 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம் பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள நிலைமைகளை கருத்திற் கொண்டு அடுத்த வருடமும் சவாலான பாதீட்டை முன்வைக்க வேண்டியேற்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# இலங்கை அரசியல் களத்தில் விரைவில் அதிரடி மாற்றங்கள்

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன

(கொழும்பு)

இலங்கைஅரசியல்களத்தில் விரைவில் அதிரடி மாற்றங்கள் காத்திருக்கின்றன. நாம் மக்கள் நின்றே தீர்க்கமான முடிவுகளை எடுப்போம் என பரபரப்புத் தகவலை வெளியிட்டார் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன.

அவர் மேலும் கூறுகையில், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்குள் குழப்பமா? கட்சியின் ஆண்டு விழா திட்டமிட்டவாறு நடைபெறுமா? என ஊடகவியலாளர்கள் பலர் என்னிடம் கேள்விகளைத் தொடுத்து வருகின்றார்கள்.

ஒவ்வொரு கட்சிக்குள்ளும் சிறிய,பெரிய பிரச்சினைகள் இருக்கின்றன.அந்தப் பிரச்சினைகளுக்குக் கட்சிகளின் தலைமைகள் தீர் வுகளைக் காணும். நான் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர்..

எனவே, எமது கட்சிக்குள் பிரச்சினைகள் இருந்தால் அதனை நான் தீர்த்து வைப்பேன். வெளியில் சொல்ல வேண்டிய அவசியம் எனக்கு இல்லை.

இலங்கை அரசியல் களத்தில் பாரிய குழப்பங்களுக்குச் சதித்திட்டங்கள் வகுக்கப்படுகின்றன என்று எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

கட்சிகளின் உள்வீட்டு விவகாரங்களை ஆராயும் ஊடகவியலாளர்கள்பிரதான அரசியல் களத்தில் நடக்கும் - நடக்கப் போகின்ற் விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும்.

அரசியல்களத்தில்விரைவில்அதிரடிமாற்றங்கள் காத்திருக்கின்றன என்று அறிய முடிகின்றது.எனினும், நாம் மக்கள பக்கம் நின்றே தீர்க்கமான முடிவுகளை எடுப்போம் என தெரிவித்தார். (ம-7)

# நண்பர்களிடையே மோதல் இளைஞன் ஒருவர் படுகொலை

(கொழும்பு)

கிராண்ட்பாஸ்- இரண்டாம் நவகும்புர பகுதியில் ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முச்சக்கரவண்டியில் பயணித்தஒருவரால்நேற்று முன்தினம் மாலை குறித்த நபர் தாக்கப்பட்ட நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவத்தில் இரண்டாம் நவகும்புர பகுதியை சேர்ந்த 23 வயதுடைய இளைஞர் ஒருவரே இந்த தாக்குதலில் உயிரிழந்துள்ளதாகவும் உயிரிழந்த நபருக்கும் அவரது நண்பருக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாட்டின் அடிப்படையில் இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலி ஸாரது ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (ம-7)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

அச்செழு மத்தி திருவருள்மிகு நாகதம்பிரான் ஸ்ரீ மதுரை மீனாட்சி அம்மன் தேவஸ்தானத்தின் மஹோற்சவப் பெருவிழா நேற்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.11 தினங்கள் நடைபெறவுள்ள இத்திருவிழாவில்

எதிர்வரும் 03 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு முத்துச் சப்பறமும் 04 ஆம் திகதி திங்கட்கிழமை பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் 05 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பகல் 10 மணிக்கு தீர்த்தத்திரு விழாவும் இடம்பெறும். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருந்தூர்மலை விவகாரம்

# வடக்கு-கிழக்கில் மீண்டும் போரைத் தூண்டும் முயற்சியே

### திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி சுட்டிக்காட்டு

(கிளிநொச்சி)

குருந்தூர்மலையை அடிப்படையாகக் கொண்டு கடந்த காலங்களில் யுத்தத்தினால் பாரியளவில் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மீண்டுமொரு முறை யுத்தத்தை தூண்ட மேற்கொள்ளப்படும் முயற்சிகள் வன்மையாகக் கண்டிக்கத்தக்கவை என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்த நாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்து தெரிவித்துள்ள அவர்,

"குருந்தூர்மலை தொடர்பில் தற்போது பல பிரச்சினைகள் எழுந்துள்ளன. எந்தவொரு மதமும் தமது உரிமைகளுக்காக வன்முறைகளில் ஈடுபடுமாறு கூறவில்லை.

இது தொடர்பில் நாம் கவலையடைய வேண்டும். அனைத்து மதங்களும் அனைத்து மதத்தையும் மதிக்குமாறு போதித்துள்ளது.

குருந்தூர்மலை தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடம் என்பதை அனைவரும் அறிந்த விடயம். தற்போது இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்பது அரசாங்கத்தின் முதன்மையான கடமையாக அமைந்துள்ளது.

வர்த்தமானி அறிவித்தலின் மூலம் குறித்த பகுதி தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்தது என அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கேற்ப அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாறாக இதனை வைத்து இனவாதத்தையும் மதவாதத்தையும் தூண்டக் கூடாது எனத் தெரிவித்தார். (4)

# கரைச்சி பிரதேச சபைக்குட்பட்ட மின்குமிழ்கள் பல ஒளிரவில்லை

(அக்கராயன்)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் எல்லைப் பரப்பில் கடந்த காலங்களில் பொருத்தப்பட்ட மின்குமிழ்கள் பல ஒளிரா விளக்குகளாக தொடர்ந்தும் காணப்படுகின்றன. மக்களின் நிதியில் பிரதேச சபையினால் பல விளக்குகள் கடந்த காலங்களில் பொருத்தப்பட்டன.

அவ்விளக்குகள் ஒளிர்கின்றதா என்ற கண்காணிப்பு இல்லாததன் காரணமாக பல கிராமங்களில் பொருத்தப்பட்ட பல மின்குமிழ்கள் ஒளிராத விளக்குகளாக காணப்படுகின்றன.

கரைச்சி பிரதேச சபையின் 21 வட்டாரங்களிலும் இந்நிலைமை காணப்படுகின்றது. தரங்குறைந்த மின்குமிழ்களை பொருத்தியமை, குரங்குகள் மின்குமிழ்களை சேதப்படுத்தியமை போன்ற பல காரணங்களினால் பெருமளவு மக்கள் நிதியில் பொருத்தப்பட்ட மின்குமிழ்கள் பயனற்றதாகவே காணப்படுகின்றன.

எனவே இது தொடர்பாக கரைச்சி பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-350)

# 14 ஆண்டுகளாக பேருந்து சேவையில்லை

### கரைதுறைப்பற்று கிராம மக்கள் விசனம்

(அக்கராயன்)

முல்லைத்தீவு கரைதுறைப்பற்றின் அம்பலவன்பொக்கணை, மாத்தளன், வலைஞர்மடம் ஆகிய கிராமங்களுக்கு 2009 ஆம் ஆண்டின் பின்னர் பேருந்து சேவைகள் நடைபெறுவதில்லை என பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த 14 ஆண்டுகளாக பேருந்து சேவைகள் இல்லாது மேற்படி கிராம மக்கள் போக்குவரத்து நெருக்கடியினை தொடர்ச்சியாக எதிர்கொண்டுள்ளனர். முல்லைத்தீவு பொது வைத்தியசாலை, புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலை ஆகியவற்றுக்கு செல்வதற்கு இக்கிராமங்களில் வாழ்கின்ற 480 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் போக்குவரத்து நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர்.

குறிப்பாக முல்லைத்தீவு நகரத்திற்கும் புதுக்குடியிருப்பு நகரத்திற்கும் பாடசாலைகளுக்கு செல்கின்ற மாணவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அம்பகாமம், ஒதியமலை, மாந்தை கிழக்குப் பகுதிகளுக்கு மாணவர்கள், ஆசிரியர்களின் போக்குவரத்து வசதியினை கருத்திற் கொண்டு மாவட்டச் செயலாளரால் பேருந்து சேவைகள் நடத்துங்கள் என இலங்கை போக்குவரத்து சபை, தனியார் பேருந்து சங்கங்களுக்கு கூட்டங்களில் உத்தரவிடப்பட்ட போதிலும் பேருந்து சேவைகளும் கிராமங்களுக்கு நடைபெறாதது போன்றே மாத்தளன், அம்பலவன் பொக்கணை, வலைஞர் மடம் ஆகிய கிராமங்களுக்கான பேருந்து சேவைகள் இடம்பெறாமல் உள்ளன என பொதுமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (4-350)

# முல்லைத்தீவு - பாலிநகரில் வர்த்தக நிலையம் தீக்கிரை



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - மல்லாவி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாலிநகர் பகுதியில் நேற்று சனிக்கிழமை அதிகாலை கடையொன்று தீக்கிரையாகியுள்ளது.

இது தொடர்பில் மல்லாவி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்று சோதனைகளை மேற்கொண்டனர். எனினும், தீ விபத்துக்கான காரணம் இதுவரையில் இனங்காணப்படவில்லை.

குறித்த தீ விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மல்லாவி பொலிஸார் மேற்கொண்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4)

# துணுக்காய் கிராமங்களில் கால்நடை திருட்டு அதிகரிப்பு

(அக்கராயன்)

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஆலங்குளம், உயிலங்குளம், தென்னியங்குளம், கோட்டைக்கட்டியகுளம், அம்பலப்பெருமாள்குளம், பழைய முறிகண்டி, ஐயன்கன்குளம், புத்துவெட்டுவான் உட்பட பல கிராமங்களில் கால்நடைகளின் திருட்டுகள் அதிகரித்துள்ளன என கிராம மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

கிராமங்களுக்கு வருகை தரும் சொகுசு வாகனங்களில் இக்கால்நடைகள் களவாக கொண்டு செல்லப்படுகின்றன.

கடந்த 10 நாட்களுக்கு முன்னர் பழையமுறிகண்டியில் ஆறு ஆடுகள் திருடப்பட்டுள்ளதாக தெரிவித்து ஆட்டின் உரிமையாளர் ஐயன்கன்குளம் பொலிஸ் நிலையத்தில் தகவல் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் கிராமங்களுக்கு வருகை தரும் வாகனங்கள் தொடர்பாக பொதுமக்கள் விழிப்புணர்வுடன் செயற்படுமாறும் பொலிஸாரினால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

எனினும் கிராமங்களில் இருந்து காடுகள் வழியாகவும் கால்நடைகள் களவாகக் கொண்டு செல்லப்படுவதாகவும் சட்டவிரோத மணல் அகழ்வு, மரக்கடத்தல்களில் ஈடுபடுபவர்கள் கால்நடைகளை களவாக கொண்டு செல்லுதல், இறைச்சிக்காக பயன்படுத்துவது தொடர்பாகவும் பொதுமக்களினால் கிராம அலுவலர்களிடம் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் இக்கிராமங்களின் காடுகளில் கால்நடைகள் இறைச்சிக்காக பயன்படுத்தப்பட்ட எச்சங்கள் காணப்படுவதாகவும் பொதுமக்களினால் தெரிவிக்கப்படுகின்றது. (4-350)

# லொறி-மோ.சைக்கிள் விபத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் காயம்

(தருமபுரம்)

லொறி-மோட்டார் சைக்கிள் மோதி ஏற்பட்ட விபத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்த விபத்து முறிகண்டிக்கும் இரணைமடு சந்திக்கும் இடையில் உள்ள ஏ-9 வீதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.

கிளிநொச்சியில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த லொறியும் முறிகண்டியிலிருந்து கிளிநொச்சி நோக்கி சென்ற மோட்டார் சைக்கிளும் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-316)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 150 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 220 |
| பச்சைமிளகாய் | 500 | 400 | 400 |
| தக்காளி | 180 | 150 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 240 |
| கோவா | 250 | 250 | 250 |
| கரட் | 480 | 450 | 500 |
| பூசணி | 120 | 100 | 80 |
| புடோல் | 80 | 100 | 200 |
| வாழைக்காய் | 220 | 200 | 160 |
| சின்ன வெங்காயம் | 220 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 200 | 200 |
| பாகற்காய் | 600 | 400 | 300 |
| வெண்டக்காய் | 120 | 80 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 160 | 200 |
| பயற்றங்காய் | 200 | 150 | 200 |
| லீக்ஸ் | 200 | 200 | 250 |
| பீற்றூட் | 100 | 150 | 160 |
| கறிமிளகாய் | 250 | 250 | 250 |
| முருங்கைக்காய் | 350 | 350 | 250 |
| போஞ்சி | 450 | 550 | 600 |
| கத்தரிதம்புள்ள | 100 | 160 | 250 |
| கீரை - 1 பிடி | 80 | 70 | 100 |
| தேசிக்காய் | 600 | 600 | 1000 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60-80 |
| இராசவள்ளி | 400 | 400 | 300 |
| வெங்காயப்பூ | 250 | 250 | 400 |
| முள்ளங்கி | 80 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 70 | 100 | 50 |
| வல்லாரை | 30 | 50 | 60 |
| ஈரப்பலா | 60 | 100 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எலிக் காய்ச்சல்...

என பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

மிகக் குறைந்த நீர் உள்ள இடங்களில் குளித்தல், மீன்பிடித்தல் போன்ற செயற்பாடுகள் எலிக்காய்ச்சல் பரவுவதை அதிகரிக்கச் செய்யும் எனவும் குறைந்தளவு நீர்மட்டம் உள்ள இடங்களில் குளிப்பதால் தோல் நோய்கள் மற்றும் வயிற்றுப்போக்கு ஏற்படும் அபாயம் உள்ளதாகவும் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார். (ம-7)

## அமெ.செல்கிறார்...

மாதம் 5ஆம் திகதி முதல் செப்ரெம்பர் மாதம் 23ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

"நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்புதல் மற்றும் உலகளாவிய ஒற்றுமையை மீண்டும் உருவாக்குதல்" என்ற கருத்திட்டத்தின் கீழ் இம்முறை பொதுச் சபைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இதேவேளை, கியூபாவில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள Group of 77 (G77) plus China உச்சி மாநாட்டில் பங்கேற்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கியூப விஜயத்தை நிறைவு செய்து கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமெரிக்காவுக்கு செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## குளவி கொட்டி...

யேசுரட்ணம் (வயது-79) என்ற 4 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

குறித்த முதியவர் நேற்றையதினம் காலை 7.45 மணிக்கு தேவாலயத்திற்கு சென்று கொண்டிருந்தார்.

இதன்போது பனையில் இருந்து கீழே விழுந்த குளவிக் கூட்டில் இருந்த குளவிகள் அவரை கொட்டியது.

இந்நிலையில் அவர் மிருசுவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, அதன்பின்னர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-7,104)

## 'சிவசக்தி'...

விளக்கமாக பிரதமர் மோடிக்கு எடுத்துக் கூறினார்.

அதன்பின் பிரதமர் மோடி விஞ்ஞானிகளுக்கு இடையே பேசினார். அப்போது அவர் கூறியதாவது, உங்களுக்கு மத்தியில் இருப்பது, எனக்கு தனிப்பட்ட மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

லேண்டர் தரையிறங்கிய இடம் "சிவசக்தி" என அழைக்கப்படும். மேலும் நிலவின் தென் துருவத்தில் சந்திரயான்-3 விக்ரம் லேண்டர் இந்திய கொடியை நாட்டிய ஓகஸ்ட் 23ம் திகதி, இனி தேசிய விண்வெளி தினமாக கொண்டாடப்படும். சந்திரயான்-2 லேண்டர் நிலவில் விழுந்த இடம், 'திரங்கா' (மூவர்ணக்கொடி) என அழைக்கப்படும் இந்தியா எடுக்கும் ஒவ்வொரு முயற்சிக்கும் இது ஒரு உத்வேகமாக இருக்கும் எந்த தோல்வியும் முடிவல்ல என்பதை இது நமக்கு உணர்த்துகிறது என பிரதமர் மோடி விஞ்ஞானிகளுக்கு இடையே உரையாற்றினார். (ம-7)

## மன்னார் மடு...

மன்னார் ஆயர் மற்றும் பிடெலிஸ் பெர்னாண்டோ ஆகியோர் சமய நல்லிணக்கம் மற்றும் சகிப்புத் தன்மையை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கும் மதத் தலைவர்கள் என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஜூலி சங் தனது டுவிட்டர் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

அந்தப் பதிவில், வரலாற்று சிறப்புமிக்க மடு மாதா ஆலயத்திற்கு சென்றேன். இந்த புனித இடத்திற்கு என்னை வரவேற்றதற்கு நன்றி என தெரிவித்துள்ளார்.

மேலும் மன்னாரில் மதங்களுக்கிடையிலான ஒற்றுமையின் சக்தி வாய்ந்த சின்னம் என்று மடு மாதா ஆலயத்தை குறிப்பிட்டுள்ளார். (ம-7,285)

## கஜேந்திர...

பொன்னம்பலத்தின் இல்லம் ஆர்ப்பாட்டக்காரர்களினால் முற்றுகையிடப்பட்டுள்ளது.

"வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழ் அரசியல்வாதிகள் தெற்கில் சுதந்திரமாக வாழ்வதைப் போன்று சிங்களவர்களும் வடக்கு மற்றும் கிழக்கில் சுதந்திரமாக வாழ வேண்டும்" எனத் தெரிவித்து குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

ஆர்ப்பாட்டம் காரணமாக கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் வீட்டுக்கு முன்பாக பெருமளவான பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டனர்.

இதனால் அப்பகுதியில் பரபரப்பான சூழல் நிலவியது.

இதேவேளை, சிலரத்ன தேரர் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

வடக்கில் சிங்கள மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்கான உரிமைகளை வென்றெடுப்பதற்காக கொழும்பில் வசிக்கும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் முன்பாக போராட்டங்களை மேற்கொள்ள இருக்கிறோம் என அண்மையில் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இந்த பின்புலத்திலே முதற்கட்டமாக கொழும்பில் உள்ள கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் வீட்டுக்கு முன்பாக போராட்டம் ஒன்றை மேற்கொள்ள உள்ளோம் எனவும் இந்த போராட்டத்தில் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில அழைப்பு விடுத்திருந்த நிலையில் நேற்று இப் போராட்டம் இடம்பெற்றுள்ளது. (ம-7)

## வடக்...

மாகாணம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன், அங்கு 23,688 குடும்பங்களைச் சேர்ந்த 75,607 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் 18,981 குடும்பங்களைச் சேர்ந்த 63,265 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், சப்ரகமுவ மாகாணத்தில் 13,705 குடும்பங்களைச் சேர்ந்த 55,096 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அதேநேரம் வடமேல் மாகாணத்தில் 7,143 குடும்பங்களைச் சேர்ந்த 23,534 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

## முட்டை...

யாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரச வணிக பல நோக்கு கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது

அந்தக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆசிரி வலிசுந்தர இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, அடுத்த மூன்று மாதங்களுக்கு முட்டையை இறக்குமதி செய்வதற்கான அனுமதி தற்போது கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)


**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

076 636 3378,

076 097 3127


### மெகா பவர்

திகதி 26/08/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1566
வெற்றி எழுத்து: Q | சுப்பர் இலக்க: 06 | வெற்றி இலக்கங்கள்: 04 07 11 60
Double Chance: 42963

### தன நிதானய

திகதி - 2023.08.26
சீட்டிழுப்பு இலக்கம் - 1248
M 12 34 56 75 M
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | விசேட ஆங்கில எழுத்து
Double Chance இலக்கம்: 25662

### Lucky 7

திகதி 26.08.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0044
L7 இலக்கம் 0 8
வெற்றி இலக்கினம்: கடகம்
வெற்றி இலக்கங்கள்: 8 1 8 1 5 7

### கொவிசெத

சீட்டிழுப்பு இலக்கம் 3460
சீட்டிழுப்பு திகதி | 26.08.2023
ஆங்கில எழுத்து: V
வெற்றி இலக்கங்கள்: 10 17 52 66
விசேட வெற்றி எழுத்து: V
02103
தேசிய லொத்தர் சபை

### HANDAHANA

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.08.26
சீட்டிழுப்பு இலக்கம் 527
வெற்றி இலக்கினம்: கடகம் | வெற்றி இலக்கங்கள்: 10 22 48 62 | விசேட இலக்கினம்: கடகம்
தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத

திகதி 2023/08/26
சீட்டிழுப்பு இலக்கம் 5218
ஆங்கில எழுத்து: Z
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 7 2 2 0 0 9
தேசிய லொத்தர் சபை

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 2192 | வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.08.26 | தினம் சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள்: 12 22 34 65 | ஆங்கில எழுத்து: D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 63,243,908.40
செகண்ட் சான்ஸ் விசேட இல.: 28944 | 625

### சனிதா

திகதி 2023.08.26 | வெற்றி வாரம் 4353 | வர்ணம் இளம் பச்சை
வெற்றி இலக்கங்கள்: 34 61 62 63 | ஆங்கில எழுத்து: B
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.55,492,748.00
செகண்ட் சான்ஸ் விசேட இல.: ரூ.100,000/- பணப்பரிசு 41898 | ரூ.400/- பணப்பரிசு 503
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### ராசி

சீட்டிழுப்பு வாரம் 3904 | வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.08.26 | தினம் சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள்: 08 32 48 60 | துலாம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 6,229,232/-
செகண்ட் சான்ஸ் விசேட இல.: 34275 | 492 | விருச்சிகம்

### கப்ருக

திகதி 26.08.2023 | வெற்றி வாரம் 1368 | வர்ணம் சிவப்ப
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
J 03 08 23 31 59
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 432,718,324.20
செகண்ட் சான்ஸ் விசேட இல.: 29478 | 723

DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### சங்வர்தன வாசனாவ

உத்தியோகபூர்வ முடிவுகள்

| வெற்றி வாரம் | திகதி | வர்ணம் |
| --- | --- | --- |
| 623 | 2023-08-26 | ஆரஞ்சு நிறம் |

ஆங்கில எழுத்து: X | வெற்றி இலக்கங்கள்: 08 32 69 | விதி எண்: 03
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 10,631,904.00
DLB DEVELOPMENT LOTTERIES தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

### அட கோடிபதி (ADA KOTIPATHI)

சனிக்கிழமை
வெற்றி வாரம்: 2018
வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2023.08.26
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,000,000/-
வெற்றி இலக்கங்கள்: 07 11 17 37 | ஆங்கில எழுத்து: O
செகண்ட் சான்ஸ் விசேட இல. Special No.: 10898 | 836 | [illegible]
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## A/L Online Classes
**Biology & Chemistry**
Conducted by
**Jaffna Lecturer**
(16820)
**077 807 5566**

## டெங்கு அதிகரிப்பு

(கொழும்பு)
இலங்கையில் பதிவாகியுள்ள டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 61,000ஐ தாண்டியுள்ளது.

எவ்வாறாயினும், டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ள அதிக ஆபத்துள்ள பிரதேசங்களின் எண்ணிக்கை 34 ஆகக் குறைந்துள்ளதாகவும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. (ம-7)

## பணியாளர்கள் தேவை
சுன்னாகத்தில் அமைந்துள்ள சுப்பர் மார்க்கட்டுக்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.
- பொதி செய்பவர்கள்
- Track Maintenance

வயது எல்லை 20 தொடக்கம் 35 வயதுக்குட்பட்ட ஆண்/பெண் இருபாலாரும்
(16829)
**077 343 4174**

## விமலம் திருமண சேவை
தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும் ஏற்ற மணமகன், மணமகள் தேவையெனில் எம்முடன் தொடர்பு கொள்ளவும்
(16690)
**0016 4765 71347 (கனடா)**
**0014 3724 46737 (கனடா)**
**077 240 9276 (தாயகம்)**

## காணி விற்பனைக்கு
கோண்டாவில் மேற்கு ஸ்ரேசன் வீதியில் (காளி கோயிலுக்கும் கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்திற்கும் இடையில்) 1 1/2 பரப்புக்களாக பிரிக்கப்பட்ட நிலையில் காணித்துண்டுகள் விற்பனைக்குண்டு.
(16850)
**077 728 6061**

## காணி விற்பனைக்கு
உசன் தெற்கில் காணி 22 பரப்பு விற்பனைக்கு உண்டு. A9 வீதியிலிருந்து 1 3/4 கிலோமீற்றர் தூரத்தில்.
விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்
(16834)
**076 075 5617**
**077 187 7018**

## IELTS
**GENERAL & ACADEMIC**
- Individual Attention
- Flexible Timing

ARIYALAI
(16822)
**076 816 1446**

## வீடு வாடகைக்கு தேவை
அரச உத்தியோகம் பார்க்கும் 3 பேர் கொண்ட குடும்பத்திற்கு வீடு வாடகைக்குத் தேவை.
யாழ்.நகரப்பகுதியில் இருந்து 4Km உள்ளே
(16835)
**021 222 0446**
**076 167 0634**

## பற்சிகிச்சை
நிரந்தர பல்கட்டுதல் (implant), கிளிப் போடுதல் மற்றும் அனைத்து நவீன சிகிச்சைகளும்
**கம்சியா**
பற்சிகிச்சைப் பிரிவில்
(யாழ்.ஆஸ்பத்திரிக்கு முன்பாக. BOC வங்கிக்கு அருகில்) நடைபெறுகிறது.
578/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(C-7137)
**077 375 4490**
**077 220 2769**

## காணி விற்பனைக்கு உண்டு
தனங்கிளப்பில் பூநகரி பிரதான வீதியில் இருந்து 100 மீற்றர் அருகாமையில் 8 3/4 பரப்பு காணி, சிறிய வீடு, மின் இணைப்பு மற்றும் தென்னை உள்ளடங்கியது.
விலை நேரில் பேசித் தீர்க்கலாம்.
**077 544 7075**
**077 220 3386**

## வகுப்புக்கள்
கணக்கீடு
- ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில்
- சாதாரண தரம் உயர் தரத்திலிருந்து பட்டப் படிப்பு மற்றும் தொழில் சார் பட்டங்கள் வரை ஆங்கிலம்
- தரம் 8 இலிருந்து சாதாரண தரம் உயர் தரம் தொழில் செய்வோர் மற்றும் வெளிநாடு செல்வோர்

**சுரேஸ்குமார்**
AAT(UK),ABE (UK),IPFM (UK),ICIA (Can),ACCA (UK)

கற்பித்தல் அனுபவம் (2000-2015)
- கொழும்பு சர்வதேச பாடசாலைகள்
- சாந்த பீட்டர் கல்லூரி கொழும்பு
- கிங்ஸ் கல்லூரி கொழும்பு

(16852)
**077 758 8112**

## காணிகள் விற்பனைக்கு
யாழ்ப்பாணம் உரும்பிராய் செல்லத்துரை வீதியில் காணிகள் விற்பனைக்கு உண்டு. 6 பரப்பும், 3 பரப்பும், வீடு கட்டவும் தோட்டம் செய்யவும் உகந்தது.
தரகர் தேவையில்லை.
(16827)
**074 010 6595**

## IELTS CLASSES
கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH *Special offer for all the courses*
- GUARANTEED TO 7.5 in IELTS Exam.
- PASS in UK A1 Exam.
- Exam REGISTRATION CENTER.

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்
(16505)
OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.
**T.P : 077 780 3970, 074 007 1970**

## காணி விற்பனைக்கு
அச்சுவேலி ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள 4 பரப்பு காணி விற்பனைக்குண்டு
1. காணியின் இருபக்கமும் பாதையுண்டு
2. இருவர் சேர்ந்தும் கொள்வனவு செய்யலாம்
3. விலை பேசித் தீர்மானிக்கலாம்
4. பார்வையிடும் நாட்கள் : ஞாயிறு - வியாழன்

தரகர் தேவையில்லை
(16831)
**071 836 1706**

## தையல் வேலைக்கு ஆட்கள் தேவை
கோப்பாயில் இயங்கி வரும் தையல் நிலையத்தில் பணியாற்ற பெண் பிள்ளைகள் தேவை பழக விரும்புவர்களும் இணைந்து கொள்ள முடியும்
(C-7138)
**075 918 1095**

## மணமகள் தேவை
யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1989ம் ஆண்டு பரணி நட்சத்திரம் கிரகபாவம் 22 செவ்வாய் 8 இல் உள்ள நிரந்தரமாக அரச திணைக்களத்தில் தொழில் புரியும் (HNDIT) மணமகனுக்கு ஆசிரியை/அரச திணைக்களத்தில் தொழில்புரியும் மணமகளை பெற்றோர் எதிர் பார்க்கின்றனர்.
**(மணமகள் வடமராட்சிக்குள் வசிப்பவராக இருத்தல் விரும்பத்தக்கது)**
(16819)
**077 864 9878,077 634 3103** (viber)

## ST. ANTONY`S COMPUTER
வட மாகாண முன்னணி கணினி விற்பனையாளர்

சகலவிதமான மடிக்கணினி (Laptop), மேசைக்கணினி (Desktop) எம்மால் மிக விரைவில் திருத்திக் கொடுக்கப்படும். மேலும் தரம் மிக்க கண்காணிப்பு கமரா (CCTV) எம்மால் பூட்டிக் கொடுக்கப்படும்.
(C-7136)
189, K.K.S. Road, Jaffna. 021 222 4865 / 077 063 3408

## கட்டட வேலைகள்
உங்கள் வீட்டினை தரமாகவும் விரைவாகவும் கட்டித்தரப்படும்
(16726)
**074 077 1490**

## காணி விற்பனைக்கு உண்டு
**யாழ்ப்பாணம் கீரிமலை சிவன் கோவில் முன்பாக 33 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**
- கீரிமலை நகுலேஸ்வரர் கோயிலில் இருந்து அளவெட்டி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன்
- நகுலேஸ்வரர் மகா வித்தியாலயத்தில் இருந்து 250 m தூரம், நகுலேஸ்வரர் ஆலயம் 50 m தூரம், பிரதான பஸ்தரிப்பு நிலையம் 75 m தூரம்.
- செம்மண்காணி நன்நீர் ஊற்றுநிலம் வீடு கட்டுவதற்கும் வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் உகந்த இடம் நல்ல சூழல்
- 3 பரப்பு ஆகவும் 2 பரப்பு ஆகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் நிலப்பரப்பு
- பார்வையிடும் நேரம் : காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணி வரை

(16858)
தொடர்புகளுக்கு:- **குரு**
**076 755 8606,**
**077 874 3204, 077 288 0152**

## Happy Supermarket - உரும்பிராய்
உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | |
|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 245/= (max2Kg) |
| 1 Kg கோதுமை மா | - 184/= |
| 1 Kg Prima கோதுமை மா | - 196/= |
| 1 Kg றவை | - 287/= |
| 1 Kg அரிசி மா | - 179/= |
| 330g Tikiri மாரி பிஸ்கட் | - 262/= ~~(330/=)~~ |
| 400 g அங்கர் பால்மா | - 1050/= ~~(1080/=)~~ |
| 400 g அன்லீன் பால்மா | - 1250/= ~~(1350/=)~~ |
| 300 g அங்கர் Family Pro | - 810/= ~~(850/=)~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 50/= ~~(80/=)~~ |
| 1 Kg சன்லைட் றோஸ் பவுடர் | - 360/= ~~(430/=)~~ |



(16860)
விசேட கொள்வனவு 500g அஸ்ட்ரா மாஜரீன் இனை கொள்வனவு செய்து 1Kg கோதுமை மாவினை இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள்.
பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.
Happy Supermarket
**0777 8080 30**

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் இல. 161, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org